14வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059    416-282-4978

வாசித்துவிட்டீர்களா?

உலக தமிழோசை

7வது இதழ்
சிறப்பு விலை

$1.50

மட்டுமே

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 14    பாலம் 16    சமூக முன்னேற்றப் பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்    AUGUST 15, 2004



கண் இருந்தும் குருடர்களாய் 05



புதிய வாகனங்களின் பராமரிப்பு 08



கூடியபின் குற்றங்காணும் கொள்கையைத் தள்ளு 14

# விடுதலைப் புலிகள போருக்குத் தயாராகின்றனர்?

## கண்காணிப்புக்குழுவிடம் அரசு புகார்

திடீரெனத் திருகோணமலையில் தமது இராணுவ பலத்தை புலிகள் அதிகரித்துள்ளனர் என்று அரசு பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.

புலிகள் முக்கியமான ஆயுதங்களையும், அத்தோடு தமது படைகளின் எண்ணிக்கையும் இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ள அதே சமயம் திருகோணமலை துறைமுகத்தைச் சுற்றி வளைத்த பகுதிகளில் புதிய பதுங்கு குழிகளையும் மிக இரகசியமாக புலிகள் அமைத்து வருவதாயும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலைமை திருகோணமலை துறைமுகத்துக்கும், அதனோடு ஒட்டிய பாதுகாப்பு மையத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும். இலங்கை இராணுவ உளவுத் துறையின் ஊடாகவே தமக்கு இந்தச் செய்திகள் கிடைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் உத்தியோக பூர்வமாக முறைப்பாடு செய்துள்ளது.

இதுவரையில் இது தொடர்பாக புலிகள் எவ்வித கருத்துகளையும் தெரிவிக்கவில்லை.



கொழும்புக்கு இது தொடர்பாக தொடர்பு கொண்டு கேட்ட போது, தனது பெயர் குறிப்பிடாமல் இது குறித்து கருத்து தெரிவித்த அரசியல் அவதானி 'அரசு பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண மனப்பூர்வமாக முன்வராத பட்சத்தில் முன் எப்போதும் இல்லாத வகையில் பெரும் அழிவுகளைச் சந்தித்தே ஆகும்.' என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் 'திருகோணமலையில் ஏதோ நடக்கப் போகின்றது என்பது போல் இருக்கும். ஆனால் திடீரென்று இன்னோர் இடத்தில் பெரும் பிரளயம் நடக்கும்' என்று கூறி முடித்துக் கொண்டார்.

# இனிப்பு வருத்தத்தால் பாலியல் உணர்வுகள் பாதிக்கப்படுமா?

இருபத்திநான்கு மணி நேரமும் இடைவிடாது இயங்குகின்ற ஒரு தொழிற்சாலையே நமது உடல். இத் தொழிற்சாலையின் தொழிற்பாட்டின் காரணமாக ஏராளமான கழிவுகள் நமது கலங்களில் உருவாகித் தொலைக்கின்றன. இந்தக் கழிவுகளை கலங்களிலேயே வைத்துக்கொள்ள கலங்கள் விரும்புவதேயில்லை. கழிவுகளை குண்டுக் கட்டாகத் தூக்கிக் கலங்களுக்கு வெளியே எறிந்து விடுகின்றன.

இவ்வாறு வெளியேற்றப்படுகின்ற அபாயகரமான நஞ்சுப் பொருட்கள் எல்லாம் குருதியினுள் விடப்படுகின்றன. குருதியில் கலக்கின்ற இந் நஞ்சுப் பொருட்கள் அப்படியே குருதித் தொகுதிக்குள்ளேயே தேங்கிவிடுமாயின் அது நமக்கு மரணத்தை ஏற்படுத்திவிடும். அதனால் குருதியில் விடப்படுகின்ற நஞ்சுப் பதார்த்தங்களை உடனுக்குடன் குருதியில் இருந்தும் வெளியேற்றி விடவேண்டும் என்று குருதி துடிக்கின்றது.

குருதியில் உள்ள கழிவுகளை சுத்திகரித்து, குருதியை சுத்தமாக வைத்திருக்கும் அற்புதமான கைங்கரியத்தை செய்து, "கழிவகற்றும் இயந்திரமாக" செயற்படும் வேலையை நமது சிறுநீரகமே பார்த்துக்கொள்கின்றது.

துப்பரவுத் தொழிலாளர்களின் முக்கியத்துவம் என்ன என்பதை நாம் எல்லாரும் தெரிந்து தானே வைத்திருக்கின்றோம். தெரியாதவர்கள் நாலு நாளைக்கு தமது கழிவுகளை வீட்டுக்குள்ளேயே வைத்திருந்தால் தெரிந்து விடும்.

கழிவகற்றும் இயந்திரமான சிறுநீரகத்தில் இந்த துப்பரவு வேலையைச் செய்வதற்கு என Glomeruli என்று பெயரிடப்பட்டுள்ள மில்லியன் கணக்கிலான மயிர்த்துளைக் குழாய்கள் உள்ளன. இந்த நுண்ணிய மயிர்த்துளைக் குழாய்களுக்குள் குருதியை எடுத்துச் சென்றால் தான் அங்கு இந்த துப்பரவு வேலை ஒழுங்காக நடைபெறும். இந்த

தொடர்ச்சி 9ம் பக்கம்

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
9.00A.M - 9.00P.M
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

Singapore Communication
Since 1991
$40.00/ Month
• Up to 700 Min Free
• Evenings & Weekends Free
• 2 Year contract
••• Offer Ends June 30. 04 •••
Family plan $40.00/ M/2 phones
•100 Min Daytime to share /Weekend Free
• Upgradable for Free Evening with more Min 2500 Min Free
• between 2 phones V/M, C/W, C/C Free
• Buy one phone as low as $49.99 & 2nd Free
••• 2 year contract
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)



வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# கடன் நன்மையும் தீமையும்



கடனைப் பற்றி வரும் இந்தக் தொடரில், சரியான முறையில் பயன்படுத்தினால் கடனால் விளையும் நன்மையைப் பற்றியும், தவறாகப் பயன்படுத்தினால் விளையும் தீமையைப் பற்றியும் இப்போது பார்ப்போம்.

**கடனின் உபயோகம்**

கடனைப் பயன்படுத்த பல நல்ல காரணங்கள் இருக்கின்றன. பணத்தை கையாள்வதில் ஓர் அடிப்படை ஒழுக்கம் உங்களிடம் இருக்குமேயானால், கிரிடிட் கார்டுகளைப் பயன்படுத்தி மிகத் திறமையாக "ஷாப்பிங்" செய்யலாம். கிரிடிட் கார்டுகள் உங்கள் வாழ்க்கையை மிகப் பயன்பெறும் படியானதாகவும், திருப்தி யளிக்கக் கூடியதாகவும் செய்யவல்லது. இன்றைக்குச் செலவழிக்க உங்களுக்கு அதிக பணத்தைத் தருகின்றது. ஆனால் நாளைக்குச் செலவழிக்கக் கூடியபணத்தைக் குறைக்கும் வாய்ப்பும் இருக்கின்றது என்பதை மறந்து விடக்கூடாது. ஒரு நிரந்தர வருமானமும், முடிந்தால் அதிகரித்துக் கொண்டே போகும் வருமான நிலையும் இருந்தால், இவ்வாறு கிரிட்கார்டுகளைப் பயன்படுத்தி ஓரளவுக்கு இன்றைய வருமானத்தை விட அதிகம் செலவழிப்பதால் பெரிய கெடுதல் ஒன்றும் வந்து விடாது. நுகர்வோருக்கான கடன்களின் அடிப்படையே உங்களுக்கு தேவையான பொருள்களையும், சேவைகளையும் இன்றே அனுபவிக்கச் செய்து, அதற்கான விலையை நாளை பெறுவதே ஆகும். தேவைப்பட்டால் நாளை இந்த விலையை தவணை முறையிலும் செலுத்தலாம்.

கையில் ரொக்கம் அதிகம் இல்லாத போது கிரிடிட் கார்டுகளை நிச்சயம் கைகொடுக்கும். ஓர் அவசரநிலை. உடனடியாக சொந்த நாட்டிற்குப் போக வேண்டும். விமானக் கட்டணத்தை கிரிடிட் கார்டில் செலுத்தலாம். யாரிடமும் போய்க் கடன் கேட்க வேண்டாம்.

வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் பொருளாதார ரீதியில் வரும் போது சமநிலையைத் தருபவை கடன்களே. உங்களுக்குக் கடன் கொடுக்கும் நிறுவனம், உங்களை ஒரு நல்ல 'ரிஸ்க்' ஆகக் கருதுமேயானால் நீங்கள் பொறுப்பானவர் என்று அர்த்தம்.

**துர்ப்பிரயோகமாகும் கடன்**

கடனைத் துர்ப்பிரயோகம் செய்தால் பிரச்சனைகள் ஆரம்பமாகும். எல்லாப் பிரச்சனைகளுமே, தவணைப்படி கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறும் போதே ஆரம்பமாகின்றன. எதை முன்னே செய்ய வேண்டும், எதை பின்னே செய்யவேண்டும் என்று தெரியாமல் காரியங்களைச் செய்வதும், அடிப்படைத் திட்டமிடல் இல்லாமல் இருப்பதுமே இந்த நிலைமைக்குக் காரணமாகும். ஒருபோதும் தேவைக்கதிகமாகச் செலவு செய்யாதீர்கள். எந்தப் பொருள் மீதும் கண்டதும் காதல் கொள்ளாதீர். தீர ஆராய்ந்து பணத்தையும் சரி, கிரிடிட் கார்டுகளையும் சரி உபயோகியுங்கள். கண்டதும் காதல் கொண்டு பொருள் வாங்குபவரை அடையாளம் காணமுடியுமா? முடியும். அதற்கான அடையாளங்களைக் கூறுவோம். ஆனால் இந்த அடையாளங்கள் ஆபத்தானவை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

- மனம் போன போக்கில் விலைக்கு வாங்குதல்.
- திட்டமிடாத செலவுகளை செய்தல்.
- வாங்கும் இடத்தில், சுயகட்டுப்பாடு இன்றி நடத்தல்.
- செலவழிப்பதில் எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தெரியாமல் நடத்தல்.

முதலியனவையே ஆபத்தானவை அடையாளங்கள் ஆகும்.

நீங்கள் இத்தகைய அடையாளங்களைப் பெற்றிருந்தால் கீழ்க்காணுமாறு நடந்து கொள்ளவேண்டும்.

- நாலு இடத்தில் விலையை விசாரியுங்கள்.
- அந்த விலையை ஒப்பிட்டுப் பாருங்கள்.
- அந்தப் பொருள்களின் தேவை எந்த அளவுக்கு முக்கியம் என்று யோசியுங்கள்.
- கொடுக்கும் விலைக்கு தகுந்த பயன்கள் கிடைக்கின்றனவா என்று தீர்மானியுங்கள்.

எல்லாம் சரி என்றால் அந்த பொருளை

## செய்யும் தொழிலில் வெற்றி பெற

**எந்தப் பொருள் மீதும் கண்டதும் காதல் கொள்ளாதீர். தீர ஆரா ய்ந்து பணத்தையும் சரி, கிரிடிட் கார்டு களையும் சரி உபயோ கியுங்கள்.**

வாங்குங்கள். இல்லையேல் அந்தப் பொருள் இருக்கும் பக்கமே போகதீர்கள். துஸ்டனைக் கண்டால் தூர விலக வேண்டும் என்பார்கள். அதேபோல காந்தமாக உங்களை இழுக்கும் (தேவையற்ற) பொருளிடமிருந்தும் தூர விலகி விட வேண்டும். இது நன்மையைத் தரும். வரவுக்கதிகமாக அல்லது தேவைக்கு அதிகமாகச் செலவு செய்தல், சொல்ல இயலாத துயரங்களை விரைவிலோ, நாள் படவோ தரக் கூடும். அவை நீதிமன்ற நடவடிக்கைகள், சம்பளப் பிடித்தம் (கார்னிஷ் மெண்ட்), திவால் நிலைமை (Bankruptcy) என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கக் கூடும். அத்தகைய நிலைமை குடும்ப உறவுகளையும் பாதிக்கக்கூடும். உங்கள் குறிக்கோளை நோக்கி நீங்கள் முன்னேறுவதும் தடைப்படக்கூடும்.

**கடனைத் தவறாகப் பயன்படுத்துவதால் விளையும் சில விளைவுகளை இப்போது பார்ப்போம்.**

1. கலக்ஷன் ஏஜன்ஸிகளிடமிருந்து வரும் கலக்ஷன் அழைப்புகள். காலக்ஷன்

பெரி. முத்துராமன்

ஏஜன்ஸிகள் அடிக்கடி தொல்லை தரும் தொலைபேசி அழைப்புக்களையும், கடிதங் களையும் அனுப்பக்கூடும். இத்தகைய அழைப்புகள் வாழ்வில் ஒரு பயத்தையும், கடினத் தன்மையையும் ஏற்படுத்தப்படு கின்றன. ஆரம்பத்தில் நட்பு முறையில் வரும் இந்த அழைப்புகள் போகப் போக மிரட்டலாகவும் மாற வாய்ப்புள்ளது.

2. கடன்கொடுத்த நிறுவனம், பொருட்களைத் திரும்ப எடுத்துக் கொள்ளுதல். கார், தொலைக்காட்சி போன்றவற்றை வாங்க ஒரு நிறுவனம் கடன்கொடுத்திருக்குமேயானால், கடனைத் தவணைப்படி செலுத்தாத சமயம், அந்தப் பொருளை அதாவது கார், ரிவி போன்றவற்றைத் திரும்ப எடுத்துக் கொள்ளும்.

3. கோர்ட் மூலமாகச் சம்பளத்தில் பிடித்தம். இதை ஆங்கிலத்தில் கார்னிஷ்மெண்ட் ஆப் வேஜஸ் என்பார்கள். கடன் கொடுத்தவர், நீதிமன்றத்தில் மூலமாக உங்கள் சம்பளத்தில் 20 சதவீதம் வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ளமுடியும். அத்தகைய ஒரு நிலை வேலை செய்யும் இடத்தில் கௌரவத்தைக் குறைக்காதா?

**4. திவால் நிலைமை**

கடன் நிலைமை முற்றும் போது கடைசியாக நடப்பது திவால் நிலைமைதான். சட்டம் நேர்மையான மனிதருக்கு நல்ல முறையில் வாழ்க்கையை மீண்டும் ஒரு முறை தொடர சந்தர்ப்பம் அளிக்க, முற்படுகின்றது. ஆனால் இது ஒருவரின் கடன் சரித்திரத்தை வெகுவாகப் பாதிக்கும். நீதிமன்றத்தின் மூலம் திவால் நிலைமையிலிருந்து விடுபட்ட பின் அந்த விபரம், உங்கள் கடன் சரித்திரத்தில் ஆறு ஆண்டுகள் வரை இடம்பெறும்.

**5. மோசமான கடன் சரித்திரம்**

கடன் பிரச்சனைகள் நிச்சயம் உங்கள் சரித்திரத்தை பல வழிகளில் பாதிக்கின்றது. அவற்றின் பாதிப்பை உங்களின் அன்றாட வாழ்விலும் உணர்வீர்கள். குடியிருக்க வீடு கிடைப்பதோ, நல்ல வேலை கிடைப்பதோ கூட முடியாமல் போகலாம். முன்பைப்போல யாரும் எளிதில் கிரிடிட் கார்ட் தர முன் வர மாட்டார்கள். பட்ஜட் இடந்தரக்கூடிய அளவிற்கே கடனைப் பயன்படுத்தினால் மகிழ்ச்சியாக வாழலாம். இதுவே முடிவு.



உங்களுக்குள் எழும் கேள்வி களுக்கு விடை காண பெரி. முத்துராமனுடன் 416-430-0623 தொடர்பு கொள்ளுங்கள் மின்அஞ்சல்: perrii@successbizsolaiton.com

• • •


HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336



நாளையை இன்றே தொடுவோம்



- கடந்த சில வருடங்களில் இன்ஸ்ரன்ஸ் பிரிமியம் குறைந்து வந்துள்ளது, உங்களுக்குத் தெரியுமா?
- உங்களுக்கு ஏற்ற காப்பீடு, சரியான பிரிமியத்தில் உள்ளதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?
- குழப்பம் தரும், காப்பீடு பற்றிய விவரங்களை இலகு தமிழில் புரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியவர்.

பெரி. முத்துராமன் 416.430.0623.
A licensed broker, working for you.

இவர் எல்லாக் கம்பெனிகளின் பிரிமிய விவரத்தையும் கூறி, உங்களுக்கு ஏற்ற இன்ஸ்ரன்ஸையும் எடுக்க உதவுவார். பிறகென்ன! இழப்பதற்கு ஒன்றுமில்லை, எல்லாம் லாபம்தான்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள் 416. 430.0623
A. Licensed borker working for you.



விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059, FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca



பெரி. முத்துராமன், MBA, M.COM., PFPC
Insurance Broker
Award Insurance Brokers inc.
Tel. 416-430-0623 Cell. 416-278-2026

# வாழவிடுங்கள்

*அம்மா! என்னைப் புரிந்து கொள்ளுங்கள்*
*அம்மா! என்னைப் போக விடுங்கள்*
*அப்பா! தயவு செய்து என்னைக் கொல்லாதீர்கள்*

இது ஓர் இளம் அபலைப் பெண்ணின் அபயக்குரல், இது உங்கள் காதுப் பறையிலும் ஓவென்று அறைகின்றதா?

அப்படியாயின் முன்னரே எதிர்பார்க்கப்பட்ட இக் கொலையின் உண்மைக் கதையை நீங்களும் இப்போது கேட்கலாம். இது ஏதோ ஒரு மூன்றாம் உலகின் கண்ணுள்ள ஓர் ஒதுக்குப்புறமான குக்கிராமத்தில் நடந்த தொன்றல்ல. இலண்டன் மாநகரில் உள்ள தன்னுடைய குடும்ப வீட்டிலிருந்து வெளியேற நினைத்த ஈராக்கின் குர்திஷ் (Iraqi Kurd) இளம் பெண்ணான Heshu Yones இன் சொந்தக்கதை. மேற்படி இளம் பெண் 2002, ஒக்டோபர் 12இல் இலண்டனிலுள்ள அவரது இல்லத்தில் அவரது தந்தையான Abdalla Yones ஆல் பல முறை கத்தியால் குத்தப்பட்டும் கடைசியில் கழுத்து அறுக்கப்பட்டும் கொடூரமாகக் கொலை- செய்யப்பட்டார். இக் கோரக் கொலைக்கான காரணம் வேறொன்றுமில்லை. "இவ் இளம் பெண் முஸ்லீம் அல்லாத, இளைஞனுடன் பழகுவதும், மேற்குலக கலாசாரத்தை அதிகமாக விரும்புகிறார் எனவும் அவரது தந்தை நம்பியதாகும்.

தனது அகால மரணத்தை முன்கூட்டியே எதிர்பார்த்திருந்த அவ் இளம் பெண்ணின் துன்ப துயரங்களை அவரது இளமைப் பருவ ஏக்கங்களை, அபிலாசைகளை, குடும்ப அங்கத்தவர்கள் மேலான அன்பை, தனது சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் பிற்போக்குக் கலாசாரத்தின் மேலான வெறுப்பை அவர் இறக்கும் முன்னர் எழுதிய அவருடைய கடிதங்கள் மூலமாக இப்போது பார்ப்போம்.

"அம்மா நான் போய் வருகின்றேன். ஆனால் திரும்பவும் ஒரு நாள் உங்களைச் சந்திப்பேன். எனக்காக நீங்கள் பட்ட கஸ்டங்களிற்காக நான் ஆயிரம் முறை நன்றி சொல்கின்றேன். என்னை மன்னியுங்கள். என்னால் உங்களிற்கு ஒரு நல்ல நண்பியாக இருக்க முடியவில்லை. ஆனால் என்றோ ஒரு நாள் நான் அந்த நல்ல நிலைக்கு என்னைத் தயார்படுத்திக் கொள்வேன். இப்பொழுது அந்தக் கூடாத வாயுவான என்னை உங்கள் பருத்த வயிற்றிலிருந்து வெளியேற்றி விடுங்கள். நான் வீட்டிலிருந்து வெளியேறியதாலும், என்னால் ஏற்பட்ட தொல்லைகள் குறைந்திருந்தாலும் இனி நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள். நான் என்றும் நல்ல பிள்ளையாகவே இருப்பேன் என்பதை மாத்திரம் உங்களிற்கு உறுதி செய்கின்றேன்.



" அப்பா நான் சென்று வருகின்றேன். என்னால் உங்களிற்கு ஏற்பட்ட தொல்லைகளிற்கு, மன்னித்துக் கொள்ளுங் கள். நானோ, நீங்களோ என்றுமே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவில்லை. என்னால் நீங்கள் நினைத்தது போல் வாழ முடியவில்லை. ஆனால் சில விடயங்களை உங்களால் மாற்ற முடியாதுதானே? அது சரி நீங்கள் வயது போனவராக இருந்தாலும் உங்களது குத்தும் அடியும் பலமானதாக இருந்தன. நான் நம்புகின்றேன். நீங்கள் உங்களது பலத்தை என்மேல் பரி சோதித்ததன் மூலம் சந்தோசம் அடைந்திருப்பீர்கள் என It was a fun being on the receiving end. Well Done. தற்போது நான் உங்களை விட்டுப் பிரியும் காலம் வந்து விட்டது. நான் உங்களிற்கு மனவருத்தத்தை தந்ததிற்காக திரும்பவும் மன்னிப்புக் கேட்கின்றேன். ஆனால் கடந்த பதினாறு வருடங்கள் நான் உங்களுடன் இணைந்து வாழ்ந்த போதும் அது இனியும் இயலாத தென்பது தெளிவாகி விட்டது. நான் திறந்த மனத்தோடு எனது தவறுகளை மனமுவந்து ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் என்ன செய்வது நீங்கள் எதிர்பார்த்தமாதிரியான அல்லது விரும்பியமாதிரியான குழந்தையாக என்னால் உருவாக முடியவில்லை.

" Disappointments are born of Expectation"
" ஏமாற்றங்கள் எதிர்பார்ப்புகளின் விளைவுகளே"

**கனடாவில் கூட ஓர் இளம் தமிழ்ப் பெண். அவரது சகோதரராலும் கணவனினாலும் மாடியில் இருந்து தள்ளிக் கொல்லப்பட்டுள்ளார்.**

"என்ன செய்வது நீங்கள் நினைத்தவாறு நானும், நான் நினைத்தவாறு நீங்களும் இல்லாமல் போய்விட்டிருக்கலாம்." என்றோ ஒரு நாள் எனக்கொரு நல்ல வேலை கிடைத்தால் உங்களிற்கு, நான் தர வேண்டிய ஒவ்வொரு சதத்தையும் முழுமையாகத் தந்துவிடுவேன். தற்போதைக்கு என்னால் தனிமையில் வாழ்வதற்கு ஒரு வழியைக் கண்டு கொள்ள முடியும். சமூகப் பாதுகாப்பு நிறுவனத்திடம் (Social Security) சென்று நான் தங்குவதற்கான ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அனேகமாக என் சொந்தக் கால்களில் நிற்க முடியும். தயவு செய்து என்னைத் தேட வேண்டாம். ஏனெனில் நான் எங்கே போகப் போகின்றேன் என்பது பற்றி எனக்கே இன்னும் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது இப்போது நான் தனிமையில் வாழவே விரும்புகின்றேன், அதே வேளை நான் என்னையும் பாதுகாத்துக் கொள்வேன். எனவே இனி வரும் நாட்களை, கிழமைகளை சந்தோஷமாகக் கழியுங்கள். ஏனெனில் இவ்வளவு நாட்களும் உங்களிற்கு மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தவள் இந்த வீட்டை விட்டு வெளியேறுகின்றாள்.

"என் அன்புத் தம்பி! நான் உன்னை விட்டு என்றுமே பிரியமாட்டேன். இப்பிரிவு ஒரு சிறு பொழுதுதான். நான் இப்போது இவ்வாறு நடப்பதற்காக, தயவு செய்து என்னை மன்னித்துவிடு.



*"I Love You more than I know what the word love means, Please forgive me "!*
*"அன்பு என்ற சொல்லை விட மேலாக நான் உன்னை நேசிக்கின்றேன், தயவு செய்து என்னை மன்னிக்கவும்"!*

என்னுடைய பிரச்சினை எப்பவுமே நிறையக் கதைப்பதும் கொஞ்சம் செயல்படுவதுமாகும். சரி, இப்போது நான் போய்வருகின்றேன். ஒரு நாள் நான் நல்ல நிலையில் இருப்பதை நீ பார்க்கத்தான் போகின்றாய். இது முடிவல்ல. இது தான் தொடக்கம். ஆகவே சந்தோசமாக இரு. நான் அடிக்கடி நேரம் கிடைக்கும் போதெல்லாம் உன்னை உன் பாடசாலையில் வந்து சந்தித்துக் கொள்கின்றேன். அப்போது என்னில் பல மாற்றங்களைப் பார்க்கத்தான் போகின்றாய்.

*"Life, being how it is , isn't necessarily How it is. It is just simply How you choose to see it."*
*Good bye and Good luck.* வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு நியதி இல்லை. வாழ்க்கையை எப்படி நீ தேர்வு செய்கின்றாய் என்பதே இங்கு முக்கியமானது.

இப்போது எமது சமூக மன ஓட்டங்களையும் ஒருமுறை தொட்டுப் பார்ப்போமே. இது யாரோ வொரு ஈராக்கிய குர்திஷ் இளம், பெண்ணின் கதை மாத்திரமல்ல எம் மத்தியிலுள்ள பலரின் கதையும் இதுதான். ஏனெனில் பல கொடுமைகள் மூடி மறைக்கப்பட்டு ஆழப்புதைக்கப்பட்டுள்ளன. இங்கே கனடாவில் கூட ஓர் இளம் தமிழ்ப் பெண். அவரது சகோதரராலும் கணவனினா லும் மாடியில் இருந்து தள்ளிக் கொல்லப்பட்டுள்ளார்.

இப்போது எம்முன் உள்ள பெரிய கேள்வி இக் கொடூரங்களின் பின் உள்ள சிந்தனை ஓட்டம் என்ன என்பதுவே. இதை நாங்கள் மேலெழுந்தவாரியாகச் சொல்வதென்றால் கலாசாரக் கழிவுகள் எனக் கூறிக் கொள்ளலாம். ஆனால் உண்மையில் இதன் பின்னாலுள்ள சிந்தனை என்பது நிலப் பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களே. நாங்கள் இன்று இலண்டன், கனடா, அமெரிக்கா ஜேர்மனி,.....Etc. என்று முன்னேறிய முதலாளித்துவ சூழலில் வாழ்ந்தாலும் எமது சிந்தனை என்னவோ வரண்டு தான் போயுள்ளது. தமிழ் சினிமா குப்பை தமிழ் மீடியாக் குப்பை என என்னைப் போன்று ஒரு சிலர் பலவற்றை விமர்சித்தாலும் கூட, நாங்களும் "மெட்டி ஒலி" போன்ற நாடகங்களைப் பார்க்கின்றோம் அல்லவா? காரணம் அனேகமானவற்றில், பெண்களின், துன்பதுயரங்கள், மன உளைச்சல்களை வெளிப்படுத்தப்படுகின்றனவே. இந்தப் புதை சேற்றிலிருந்து சமூகமும், முக்கியமாகப் பெண்களும் வெளியேற வேண்டுமாயின் ஜனநாயக சிந்தனை என்ற படகும், நேர்மையான செயல்பாடு என் றதுடுப்புகளுமே இன்றைய உடனடித் தேவையாக உள்ளன. தேவையைப் புரிந்து கொள்வோம். பயணத்தைத் தொடர்வோம். மனித வரலாற்றை ஒரு முறை திரும்பிப் பார்ப்போம். (இதற்கு ராகுல சாங்கிருத்தி யனின் "வல்காவிலிருந்து கங்கை வரை" என்ற நூலை வாசிக்கவும்) ஜனநாயகமற்ற எந்தவொரு செயல்பாடும் சரியான தீர்வைத் தராது என்பதுடன் எதிர்மறையான விளை வையே கொண்டுவரும் என்ற உண்மையைப் புரிந்து கொள்வோம். இப்போது கிரேக்க நாடக ஆசிரியர் சோபோகிளிசின் பிரபலமான சொந்தங்க ளோடு விடைபெறுவோம். "கொலை செய்பவன் யார்? பலியானவன் யார்? அதைப் பற்றிப் பேசு. உரக்கப் பேசு. இப்போது பேசவில்லையெனில் பின் எப்போதுமே பேச முடியாது."

பிரதியாக்கம் - க. தவபாலன்
*(ஆதாரம் :- Harper's Magazine January, 2004, Canada)*


# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# தமிழ் பிராஹ்மி கல்வெட்டுக்கள் தரும் சாட்சியம்



தமிழ் ப்ராஹ்மி கல்வெட்டுக்கள் முன்னர் சொன்னது போல அசோகன் காலத்திலிருந்து ப்ராஹ்மி எழுத்துக்கள் ப்ராக்ருத மொழிக் கானவை என்பதை முதன் முதலில் 1850-க்களில் ஜேம்ஸ் ப்ரின்ஸெட் என்பவர் கண்டறிந்தார். ஆனால்

## வெங்கட் சாமிநாதன்

தமிழ் நாட்டில் காணப்பட்ட ஆரம்ப கால கல்வெட்டுக்கள் ப்ராஹ்மி வகையினதாக இருந்தாலும், ப்ராகிருத மொழிக்கான ப்ராஹ்மி எழுத்துக் களிலிருந்து மாறுபட்டிருந்த காரணத்தால் அவற்றைப் படித்தறிவது சிரமமாகவே இருந்தது. ஏழாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட வட்டெழுத்துக்கள் க்ரந்த எழுத்துக்கள் அவற்றின் காலகட்ட

**பனை ஓலையும் எழுத் தாணியும் எழுத்தறிவு பரவ, ஜனநாயகப்படுத் தப்பட, எளிதான, மலி வான, தமிழ் நாட்டில் குறையின்றி எங்கும் நிறைந்து கிடக்கும் சாதனங்களாயின.**

வளர்ச்சிப்படிமங்களில், இன்றைய தமிழ் எழுத்துக்களுடன் கொண்டுள்ள நெருங்கிய தோற்றத்தால் அவற்றைப் படி எடுத்து புரிந்து கொள்ளுதல் இவற்றிற்கு முந்திய மாறிய ப்ராஹ்மி எழுத்துக்களைக் காட்டிலும் சுலபமாகவே இருந்தன.

1924-ல் தான் கே.வி. சுப்பிரமணிய ஐயர், இவை தமிழ் மொழியின் சப்தங்களை வெளிப்படுத்துதற்கு ஏற்ற வகையில் மாற்றப்பட்ட ப்ராஹ்மிதான் எனவும், ஆகவே, இவை தமிழ்-ப்ராஹ்மி என வேண்டும் என்றும் கண்டுபிடித்தார். ஆனால், இதன் பிறகு, இதைத் தொடர்ந்து இவற்றை, இப்புதிய பார்வையில் ஆராயவில்லை. ஐராவதம் மஹாதேவனின் பல்துறை ஆராய்வில் (எழுத்துக்கூட்டு முறை (orthography), தொல் எழுத்துக்கலை (palaeography), தமிழ் இலக்கணம், ஆரம்ப சங்க இலக்கியங்களில் காணும் ஒத்திசைவின் சாட்சியங்கள் என) இவற்றைப் படிக்க முடிந்துள்ளது. இக்கல்வெட்டுக்கள் ஒன்றிரண்டு வரிகள் அல்லது வாக்கியங் களே கொண்ட மிகச் சிறிய சாசனங்களால் ஆனவை. பெரும்பாலும் மனித நடமாட்ட மற்ற மலைக்குகைகளில், பாறைப்பிளவு களில் காணப்படுபவை. இக் குகைகள் ஜைன புத்த (பெரும்பாலும் ஜைன) பிக்குகளுக்கான தங்குமிடமாக அமைந் தவை. கற்படுக்கைகள் கொண்டவை. இத்தகைய கல்வெட்டுக்கள் மொத்தம் 89. பின்னர் இன்னம் ஒரு 21 கல்வெட்டுக்கள் தமிழ்-ப்ராஹ்மிக்கும் அடுத்த கட்ட வளர்ச்சியின் ஆரம்பமான வட்டெழுத்துக் களால் ஆனவை. இவற்றிலுருந்து தான் இன்றைய தமிழ் எழுத்துக்கள் பரிணாமம் பெற இருந்தன. இக்கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்கள், அக்காலத்தில் கிழக்குக் கடற்கரையையும் (தமிழ் நாட்டையும்) மேற்குக் கடற்கரையையும் (சேர நாட்டையும்) இணைக்கும் வாணிக நெடுஞ்சாலையை புள்ளியிட்டு வரைந்து காட்டுவதாகவே உள்ளன.

அக்கால ரோமானிய நாணயங்கள், ப்ராஹ்மி எழுத்துக்கள் கீறப்பட்ட பானை உடைசல்கள் (shreds) எல்லாம் கண் டெடுக்கப்பட்டுள்ள இடங்கள், கல்வெட்டுக் கள் புள்ளியிட்டு கோடிழுக்கும் பாதையோடு ஒத்துள்ளன. பானை உடைசல்களில் காணப்படும் ப்ராஹ்மி கீறல்கள் கிராமப் புறங்களிலும், கல்வி பரவியிருந்ததையும், மொழி வாய் மொழி மரபிலிருந்து, வரிவடிவ மரபிற்கு மாற்றமடைந்துள்ளதைக் குறிக்கும். இந்த ப்ராஹ்மி எழுத்துக்களைத் தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர்கள், அசோகர் காலத்திற்குப் பின் வந்த ஜைனர்கள். அக்காலத்தில் மக்கள் மொழியாகவும், அரசு மொழியாகவும், வளமான இலக்கிய மொழியாகவும் தமிழ் இருந்த காரணத்தால், ஜைனர்கள் தமிழ் மொழியைக் கற்றனர். அம்மொழிக்கு வரி வடிவம் கொடுக்க தாம் அறிந்த ப்ராஹ்மி எழுத்துக்களைப் பயன்படுத்தினர். தாம் கற்ற தமிழ் மொழியில் இலக்கண நூல்கள் பெரும் பாலானவற்றையும், காப்பியங்கள் பலவற்றையும், நீதி நூல்களையும் அவர்கள் இயற்றினர். பானை உடைசல்களில், முத்திரைகளில், கல்வெட்டுக்களில் காணப்படும் ப்ராஹ்மி எழுத்துக்களையும், அதனைத் தொடர்ந்து வட்டெழுத்துக்கள் பெற்ற மாற்றத்தையும் ஆராய்ந்த ஐராவதம் மஹாதேவன் இவை தமிழில் இருப்பதாலும், நகர்ப்புறம் மட்டுமின்றி, கிராமங்களிலும் பரவியிருப்பதா லும், அக்கால கட்டத்திலேயே, தமிழ் நாட்டில் கல்விப்பெருக்கம் சமூகத்தின் சகல மட்டங்களிலும் பரவியிருந்தது என்ற முடிவிற்கு வருகிறார். இதற்கான இரண்டு சாட்சியங்கள், தென்னிந்தியாவின் வட பகுதிகளில் (கன்னடமும் தெலுங்கும் பேசப்



படும் பகுதிகளில்) காணப்படும் கல்வெட்டுக் கள், ப்ராகிருத மொழிக்கான கல்வெட்டுக்களே அல்லாது, கன்னட தெலுங்கு மொழிகளுக்கான (தமிழ் போல்) மாற்றப்பட்ட ப்ராஹ்மி எழுத்துக்கள் கொண்டவை அல்ல. அப்பகுதி களில் ஜைனர்கள் ப்ராகிருத மொழியிலேயே, அது அரசு மொழியுமாக இருந்த காரணத்தால், தம் செயல்பாடுகளுக்கு போதுமானதாக இருக்கக் கண்டனர்.

தாம் கற்ற தமிழ் மொழிக்கு, தாம் கொணர்ந்த ப்ராஹ்மி எழுத்துக்களை, தமிழ் ஓசைக்கு ஏற்ப மாற்றி புதிய வரிவடிவங்களை உருவாக்கினர். ஆனால் தமிழ் நாட்டில், தமிழ் மக்கள் ப்ராகிருத மொழியின் மேலாண்மையை அனுமதிக்கவில்லை. அதுவே மக்கள் மொழியாகவும், அரசு மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் இருந்ததால், ஜைனர்கள் தமிழ் கற்றனர். தம் மதத்தைப் பிரச்சாரம் செய்ய வந்த கிறிஸ்துவ பாதிரி-மார்கள் தமிழ் கற்று, தமிழில் அகராதிகளும், காப்பியங்களும் இயற்றியது போல, தம் பிரச்சாரங்களை தமிழிலேயே செய்தது போல, தமிழ் சமூகத்தின் எல்லாத்தரப்பினரிடையேயும் கல்வி பரவியிருந்ததற்கு, அக்கால கட்ட சங்க கால புலவர்களில் மன்னர்கள், வாணிகர், பிராமணர், பல்வேறுவகை தொழில் வினைஞர்கள், பெண்கள் என சமூகத்தின் எல்லாத்தரப்பினரும் இருந்ததே ஒரு பலமான சாட்சியமாகும். தமிழ் நாட்டில் அரசும் நிர்வாகமும், கிராமங்களின் சுய நிர்வாக அமைப்புகளிலிருந்து படிபடியாக அரசன்வரை கட்டமைக்கப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்களில், அம்பலம், மன்றம் பொதியல் என அவ்வமைப்புகள் பேசப் படுகின்றன. தமிழ் நாடு அக்காலங்களில் பல சிற்றரசுகளாக இருந்தபோதிலும் அவை சுதந்திர அரசுகளாக இருந்தன. மௌரிய சாம்ராஜ்யம் இப்போதைய ஆந்திரப் பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்ததை கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தமிழ் ப்ராஹ்மி 18 மெய்யெழுத்துக்களையும், 8 உயிர் எழுத்துக்களையும் மட்டுமே கொண்டதாக இருந்தது. பனை ஓலையும், எழுத்தாணியும், எழுத்தறிவு பரவ, ஜனநாயகப்படுத்தப்பட, எளிதான, மலிவான, தமிழ் நாட்டில் குறையின்றி எங்கும் நிறைந்து கிடக்கும் சாதனங்களாயின. இப்பனையோலையின் அறிமுகமே எழுது வற்கு எளிதான வட்டெழுத்துக்கள் ஒரு சில நூற்றாண்டுகளிலேயே, 6-7 ம் நூற்றாண்டுகளில் வருகை தருவதற்கும்



காரணமாயிருந்திருக்கக் கூடும். இக் கட்டத்தின் ஆரம்பத்தில், தமிழ் எழுத்துக்கள் ஒரு நிலைபெ-பற்ற வளர்ச்சிக் கட்டத்தை அடைந்து விட்டன.

தொடரும்


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**



• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON

416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON



**S M I L E**

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days

**சமர்பனா டான்ஸ் அகடமி**

Samarpana Dance Academy



**தேவா குணசீலன்**

Artistic Director & Principal

பரத நாட்டிய வகுப்புக்கள் கலாஷேத்ரா பாணியில் ( Kalakshetra Style) நான்கு இடங்களில் (4 locations) கற்பிக்கப்படுகின்றது.

East York, Scarborough, Markham, Brampton

வயதிற்கு ஏற்ப தனி வகுப்புகள் உள்ளன. All age groups welcome.

ஆண்டு பரீட்சைகள், பள்ளி ஆண்டுவிழா, சான்றிதழ்கள் வழங் கப்படும். அரங்கேற்றம் நடத்தப் படும். மேலும் அரங்கேற்றம் முடித்தவர்கள், பல மேடைகளில் நடனம் புரிய விரும்புபவர்களும் (Stage Performance), மற்றும் புதிதாக சேர விரும்புபவர்களும் அழையுங்கள்.



416.944.2392

gunadance@yahoo.com

*Admisions open till vijayadashimi*

# கண் இருந்தும் குருடர்களாய்

## சாதாரண மனிதன் சிந்தனையிலிருந்து

அண்மையில் Fahrenheit 9/11 என்ற திரைப்படத்தை பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. திரைப்படம் என்று சொல்வதை விட திரையில் விவரணப்படப் (Documentary) பாணியில் உலக வர்த்தக மையம் அழிக்கப்பட்டமை, ஈராக், ஆப்கானிஸ்தான் யுத்தம் போன்றவற்றிக்கான காரணங்களை ஆதாரங்களுடன் ஊகிக்கப்பட்டு இருந்தன. முக்கியமாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் குடும்பத்திற்கும் சவூதி அரேபிய அரச குடும்பங்களிற்கும் பின்லாடன் ஆப்கானிஸ்தான் பிரதமர் கார் ஸாய் போன்றவர்களிற்கு இடையே இருக்கும் தொடர்பினை விவரமாக காட்டப்பட்டிருந்தது.

உலகின் எந்த மூலை முடுக்குகளிலும் நடைபெறும் இரகசியங்களை அறிந்து சொல்லும் வல்லமை பெற்ற CIA போன்ற உளவறியும் நிறுவனங்களின் சேவையை கொண்டு இருக்கும் வல்லரசு நாடான அமெரிக்காவில் அல்குவைதா போன்றதொரு இயக்கம் நடாத்த இருந்த பயங்கரவாத செய-லைப்பற்றிய தகவல்களை அமெரிக்க அரசு

**நாம் கண்கள் இருந்தும் குருடர்களாகவே வாழுவதா அல்லது விடுவதா என்று முடிவெடுப்பது அவர்கள் கைகளிலேயே இருக்கின்றது.**

அறியாமல் இருந்து இருக்குமா? 1993ஆம் ஆண்டு உலக வர்த்தக மையத்தினை தகர்த்தெறிய எடுக்கப்பட்ட முதல் முயச்சியில் கைதானவர்கள் தமது தண்டணையினை குறைவாகப் பெற்றுக்கொள்வதற்காக உண்மையான சில தகவல்களை அமெரிக்க உளவுப் படைகளுக்கு கொடுக்க வேண்டியிருந்தது. அதில் ஒன்று விமானங்களை கொண்டு அமெரிக்காவின் முக்கிய மையங்களைத் தாக்க இருக்கும் திட்டமாகும். இது 95ஆம் ஆண்டுக்கு முன்பே தெரிவிக்கப்பட்டு இருந்தும் அது பற்றி நடவடிக்கை எடுத்து இப்படியான ஒரு மனித அழிவை அமெரிக்காவில் ஏற்படுவதை தடுக்காமல் விட்டது அமெரிக்க அரசின் அசண்டையீனமா? அல்குவைதாவை குறைவாக மதிப்பிட்டமையா? அல்லது வேறுபல காரணங்களை செய்வதற்கு சாதகமாக இருக்கும் வகையில் இந்த விடயத்தைக் கண்டும் காணாமல் விட்டமையா என ஏற்கனவே சாதாரணமனிதன் சிந்தனையில் 'விளம்பரம்' பத்திரிகையில் சொல்லப்பட்டதையே ஃபரனைட் 9/11 மூலம் திரையில் சொல்லப்பட்டு இருக்கின்றது.

ஃபரனைட் 9/11 மூலம் விளங்கிக் கொள்ளப்பட்டவற்றை பார்ப்போம். ஜனநாயகம் என்று கூறிக்கொண்டாலும் அமெரிக்காவில் என்றால் என்ன, ஆண்டிப்பட்டியில் என்றால் என்ன அரசியல் அசிங்கமானதே. மக்களுக்கு சேவை என்ற பெயரில் தமது சுயநல இலாபங்களுக்கும் தனிமனித அதிகாரத்தை நிலைநிறுத்தி தானும் தன்னை சார்ந்து வால் பிடிப்பவர்களுக்கும் இலாபகரமாக காய்களை நகர்த்தி பணத்தை மக்களிடம் சுரண்டி பைகளை நிறைத்துக் கொள்வதே அரசியல் வாதிகளின் ஒரே நோக்கம். மனித உயிர்களின் அழிவுபற்றி எல்லாம் அரசியல் தலைவர்கள் அக்கறை கொள்ளமாட்டார்கள். ஆனால் மனித அழிவுகள் பற்றி மிகுந்த கரிசனையுடன் நடந்துகொள்பவர்கள் போல் நடித்தாலும் கொலைகள் செய்யக்கூட தயங்கமாட்டார்கள். இது ஜனநாயக அரசியல் நடாத்துபவர்களுக்கு மாத்திரம் அல்ல ஓர் இனத்தின் விடுதலைக்காக போராடுகின்றோம் என்ற பெயரில் விடுதலை இயக்கத்தை சார்ந்தவர்களும் அவர்களின் ஆதரவாளர்கள் என்ற போர்வையில் சுயலாபம் அடைபவர்களுக்கும் பொருந்தும். இவற்றிற்கு உதாரணங்களாக இலங்கை மற்றும் மத்திய கிழக்கு நாட்டு அரசுகளினதும் விடுதலை இயக்கங்களினதும் செயல்களை நாம் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. அது பற்றி எம்போன்ற சாதாரணமக்கள் என்ன செய்யலாம்? வாயைப்பொத்திக் கொண்டு நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ்வது ஒன்றுதான்.



ஃபரனைட் 9/11 எதையும் நிரூபிக்கா விட்டாலும், ஊகங்களையும், சந்தேகங்களையும் நம்பக்கூடிய வகையில் எடுத்து சொல்லி இருக்கின்றது. ஜோர்ஜ் புஷ் அரசவாதங்களை அல்லது உண்மைகளை சொல்வதற்கு சென்டிகிறேட் 11/9 என்று யாராவது குடியரசுக்கட்சிக்கு ஆதரவாளர்கள் ஒரு படத்தின்மூலம் சொல்வார்கள் என்று எதிர்பாக்கவும் முடியாது. அப்படி நடக்கவும் சந்தர்ப்பம் இல்லை. ஜோர்ஜ் புஸ் ஐப் பற்றிச் சொல்லியவரைப் பற்றிப் பார்த்தோமேயானால் ஃபரனைட் 9/11 ஐ தாயரித்து இயக்கிய மைக்கல் மூர் மக்களுக்கு உண்மையை சொல்ல வேண்டும் என்று தன்னால் இயன்ற ஆதாரங்களை திரட்டித் தந்து இருந்தாலும், ஜோர்ஜ் புஷ் இனது அரசினை கவிழ்த்து, தான் சார்ந்திருக்கும் ஜனநாயக கட்சியின் அரசினை அமெரிக்காவிற்கு திரும்பக் கொண்டு வருவதே அவரது முழுநோக்கம் என்பதை நிரூபிப்பதற்கு அந்தப்படத்தில் பல காட்சிகள் ஆதாரமாக உள்ளன. அதில் இருந்து மைக்கல் மூரினது சுயநல நோக்கும் தெளிவாகப் புலப்படுகின்றது. திரைப்பட துறையில் உள்ள ஜனநாயக கட்சியின் ஆதரவாளர்களின் ஆதரவுடன் பல மில்லியன் டொலர்களை தனது சட்டைப்பைகளில் நிறைத்துக் கொண்டு இருப்பவர் தன்னை ஒரு பாமரன் போன்று நடைஉடைகளில் காட்டிக்கொள்ளுகிறார். கறுப்பு இன மக்களின் ஆதங்கங்களையும் தமக்கு சாதகமாக்கி, போரின் அவலங்களையும் அதிலும் அகாலம-ரணமடையும் ஒரு மனித ஜீவனின் துன்பத்தை மக்கள் உளரீதியாக உணர்ந்து கொள்ளக் கூடியவிதமாக ஈராக் அவலங்களை எடுத்துச் சொல்லி இருப்பது மனித இனத்திற்கு அவர் செய்யும் தொண்டுச் சேவையா அல்லது பணம் பண்ண வேண்டிய தேவையா என்பதை அறிந்தவர் அவர் மட்டுமே.

எது எப்படியாக இருந்தபோதிலும் வறுமையே பெரும்பான்மை வாழ்க்கையாக கொண்ட வறிய நாடுகளில் வாழும் மக்களை விட, வசதிகள் கொண்ட அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழுகின்ற மக்கள் உலகினை அறிந்துகொள்ள, உண்மைகளை புரிந்து கொள்ள, மனிதத்தினை மதித்து உலகில் மனிதம் வாழவைப்பதற்கு ஃபரனைட் 9/11 போன்று எத்தனையோ கண்கள் இருக்கின்றன. அவை இருந்தும் என்ன பிரயோசனம். நாம் கண்கள் இருந்தும் குருடர்களாகவே வாழுவதா அல்லது விடுவதா என்று முடிவெடுப்பது அவர்கள் கைகளிலேயே இருக்கின்றது.

சிந்தனை தொடரும்

பரம் ஜி

ஒரு சாதாரண மனிதன்

## ஜெயலலிதாவின் கடும் உத்தரவு



சிசுக்கொலையை தடுப்பதற்காக கருவுற்றிருப்பது ஆணா, பெண்ணா என்று கண்டறியும் மருத்துவப் பரிசோதனை இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இலை மறைகாயாய் இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு கருவுற்றிருப்பது பெண் என்று தெரிந்ததும் கருக்கலைப்பும் நடக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் தாயின் விருப்பத்திற்கு மாறாக கருக்கலைப்பு செய்யும்படி பெண்ணை நிர்ப்பந்திக்கப்படுவதும் நிகழ்கின்றது.

இவ்வாறு மருத்துவப் பரிசோதனை செய்வது சட்டப்படி குற்றம். இதற்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்க சட்டம் இடம் அளிக்கின்றது. இந்த சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தும்படி மாவட்ட ஆட்சியாளர்களிடம் தமிழக முதலமைச்சர் ஜெயலிதா உத்தரவு பிறப்பித்துள்ளார். சட்டத்தை மீறி மருத்துவ சோதனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் படியும் இவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்
Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.
www. themathuram.com
Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)
HomeLife HIGHER STANDARDS
themathuram.com

# ஆசியக்கிண்ணம் 2004

## விளையாட்டு செய்திகள்




**எஸ். கணேஷ்**

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஆசியகோப்பை ஆட்டங்களில் சிறிலங்கா இந்தியாவை மண்கவ்வ வைத்துள்ளது.

சிறிலங்காவில் நடைபெற்ற ஆசியக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சிறிலங்கா 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது. இந்த இறுதிப் போட்டி சிறிலங்காவின் தலைநகரான கொழும்பில் உள்ள பிரேமதாசா மைதானத்தில் நடைபெற்றது. இது பகலிரவுப் போட்டியாக நடைபெற்றது. முன்னதாக டாசில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் அட்டப்பட்டு முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். சிறிலங்கா தரப்பில் அதிரடி வீரர் ஜெயசூரியாவும், குணவர்த்தனேவும் துவக்க வீரர்களாக களம் இறங்கினர். இந்திய அணி தரப்பில் சுழற்பந்துவீச்சாளர் அனில்கும்ப்ளேவுக்கு பதிலாக நடுவரிசை பேட்ஸ்மன் வி.வி.எஸ் களமிறக்கப்பட்டார். அதே போன்று சிறிலங்கா தரப்பில் வாஸ் மற்றும் முரளிதரன் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டனர்.

சிறிலங்காவின் துவக்க வீரர்கள் இருவரும் நிதானமாக ஆடி அணியின் எண்ணிக்கையை சிறிது சிறிதாக கூட்டினர். அணியின் எண்ணிக்கையை அவர்கள் 28க்கு கொண்டு சென்றபோது அவர்களுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. சிறிலங்காவின் அதிரடி வீரரான ஜெயசூரியா பதான் வீசிய பந்தில் LBW ஆகி வெளியேறினார். அவர் மொத்தம் 20 பந்துகளை சந்தித்து 15 ஓட்டங்களை எடுத்திருந்தார். இதில் 2 பவுண்டரிகள் அடங்கும்.

ஜெயசூரியா ஆட்டமிழந்தது இந்திய வீரர்களுக்கு ஓர் உற்சாக ரொனிக்காக இருந்தது. அவர்கள் ஆரவாரம் செய்து, பதானை பாராட்டினர். அடுத்தாக சிறிலங்கா அணித்தலைவர் அட்டப்பட்டு களமிறங்கினார். அவர் மற்றொரு துவக்க வீரரான குணவர்த்தனேவுடன் இணைந்து நிதானமாக ஆடத்துவங்கினார். ஆனால் அணியின் எண்ணிக்கை மேலும் 3 ஓட்டங்களுக்கு உயர்ந்தபோது மற்றொரு அதிர்ச்சி அவர்களுக்கு காத்திருந்தது. மற்றொரு துவக்க வீரரான குணவர்த்தனே நெக்ரா வீசிய பந்தை அடித்தபோது கங்குலியிடம் Catch கொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 22 பந்துகளை சந்தித்து 8 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார். பின்பு, சங்ககாரா களம் இறங்கினார். இருவரும் இணைந்து ஆடத்துவங்கியதும் இலங்கையின் புள்ளி விவரப்பட்டியலின் எண்ணிக்கை அதிகரிக்கத் துவங்கியது. இவர்கள் இருவரையும் பிரிப்பதற்கு இந்திய அணித்தலைவர் கங்குலி பந்துவீச்சாளர்களை மாற்றிப் பார்த்தார். ஆனால் அதற்கு தகுந்த பலன் கிடைக்கவில்லை. இதற்கிடையே சங்ககாரா 50 ஓட்டங்களைக் கடந்தார். அவர் மேலும் 3 ஓட்டங்களை சேர்த்த நிலையில், சேவாக் வீசிய சுழற்பந்தில் கிளீன் போல்டானார். இது இலங்கை அணிக்கு அடுத்த அடியாக விழுந்தது.

சங்ககாரா மொத்தம் 82 பந்துகளை சந்தித்து 53 ஓட்டங்களை எடுத்தார். இதில் 6 பவுண்டரிகள் அடங்கும். அவர் மொத்தம் 109 நிமிடங்கள் களத்தில் நின்றார். அவருக்கு பின்பு ஜெயவர்தனே களமிறங்கினார். ஆனால் அவரும் நீண்ட நேரம் களத்தில் நிற்கவில்லை. டெண்டுல்கார் வீசிய சுழற்பந்தில், யுவராஜ் சிங்கிடம் Catch கொடுத்து, கணக்கைத் துவக்காமலேயே பெவிலியன் திரும்பினார். அப்போது அணியின் எண்ணிக்கை 150.

அடுத்தபடியாக தில்ஷான் களமிறங்கினார். ஒரு முனையில் விக்கெட்டுகள் வீழ்ந்து கொண்டே இருந்தபோதிலும், மறுமுனையில் சிறிலங்கா அணித் தலைவர் அட்டப்பட்டு நிலைத்து நின்று ஆடி அணிக்கு ஓட்டங்களை சேர்த்துக் கொண்டிருந்தார். இதற்கிடையே சிறிலங்கா அணித்தலைவர் அட்டப்பட்டு தனது அரைசதத்தை எட்டினார். அணியின் எண்ணிக்கை 174க்கு உயர்ந்தபோது அணித்தலைவர் அட்டப்பட்டு ஆட்டமிழந்தார். அவர் 65 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். சிறிலங்கா அணித்தலைவர் அட்டப்பட்டு 87 பந்துகளைச் சந்தித்து 65 ஓட்டங்களை எடுத்தார். இதில் 8 பவுண்டரிகள் அடங்கும். அவர் ஆட்டமிழந்தபோது இலங்கை அணியின் புள்ளிவிபரம் 174 ஓட்டங்களுக்கு 5விக்கெட் இழப்பு என்ற நிலை இருந்தது. பின்பு தில்ஷானுடன் சந்தானா இணைந்தார். அதன் பின்னர் இலங்கை அணியின் புள்ளிநிலை ஏறவில்லை. பின்வரிசை வீரர்கள் குறைந்த ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தனர். இறுதியில் இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 9விக்கெட் இழப்பிற்கு 228 ஓட்டங்களை எடுத்திருந்தது. வாஸ் 6 ஓட்டங்களுடனும், ஜொய்சா 6 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காமல் களத்தில் இருந்தனர். தில்ஷான் தன் பங்கிற்கு 22ஓட்டங்களை எடுத்தார். அப்போது டெண்டுல்கர் வீசிய பந்தில் டராவிட்டிடம் Catch கொடுத்து பெவிலியன் திரும்பினார்.

இந்திய பந்து வீச்சாளர்களில் பதான் 33 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். டெண்டுல்கர் 40 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுகளை எடுத்தார். தவிர நெக்ரா, ஹர்பஜன்சிங் மற்றும் சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். 229 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்கு இந்திய அணிக்கு வைக்கப்பட்டது. சேவாக்கும், டெண்டுல்கரும் ஆட்டத்தை துவக்கினர். துவக்க வீரர்கள் இருவரும் நிதானமாக ஆடி, அணியின் எண்ணிக்கையை 15 ஓட்டங்களுக்கு கொண்டு சென்றபோது அதிரடி வீரரான ஷேவாக் வாஸ் வீசிய பந்தில் LBW ஆகி வெளியேறினார். ஷேவாக் எடுத்த ஓட்டங்கள் 5மட்டுமே. பின்பு இந்திய அணித்தலைவர் கங்குலி டெண்டுல்கருடன் இணைந்தார். ஆனால் அவரும் அதிக நேரம் களத்தில் நிற்கவில்லை. 4ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜொய்சா வீசிய பந்தில் ஜெயவர்த்தனேவிடம் Catch கொடுத்து ஆட்டமிழந்தார். ஒருமுனையில் டெண்டுல்கர் மட்டும் நிலைத்து நின்று ஆடிக் கொண்டிருந்தார். மறுமுனையில் களமிறங்கிய இந்திய வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்டமிழந்து வெளியேறிக்கொண்டிருந்தனர். லக்ஷ்மன் 12 ஓட்டங்களிலும், டிராவிட் 16 ஓட்டங்களிலும் யுவராஜ்சிங் 9 ஓட்டங்களிலும், மொகமது கைப் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர்.

இதற்கிடையே டெண்டுல்கர் மிகவும் பொறுப்புடன் ஆடி அரை சதத்தை கடந்தார். ஒருமுனையில் விக்கெட்டுகள் சிறிது இடைவெளியில் விழுந்து கொண்டிருந்தாலும் மறுமுனையில் டெண்டுல்கர் நிலைத்து நின்று ஆடியது ரசிகர்களுக்கு சிறிது நம்பிக்கை அளித்துக் கொண்டிருந்தது. இந்திய அணியின் எண்ணிக்கை 140 ஓட்டங்களாக இருந்தபோது தில்ஷான் வீசிய பந்தில் டெண்டுல்கர் கிளீன் போல்டானார். அத்துடன் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு ஒரு முடிவுக்கு வந்தது. டெண்டுல்கர் மொத்தம் 100 பந்துகளை சந்தித்து 74 ஓட்டங்களை எட்டினார். இதில் 7 பவுண்டரிகளுடன் 1சிக்சரும் அடங்கும். பின்னர் வந்த வீரர்களில் ஜாஹிர்கான் மற்றும் ஹர்பஜன்சங் ஆகியோர் சிறிது ஆடியதால் இந்திய அணி 200 என்ற ஓட்டங்கள் கௌரவமான புள்ளிநிலையை எட்டியது. ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்கள் எடுத்தது. ஜாஹிர்கான் 24பந்துகளில் 28 ஓட்டங்களை எடுத்தார். இதில் 2 சிக்சர்களும், 3பவுண்டரிகளும் அடங்கும். இந்தியாவின் முன்வரிசை வீரர்களில் யாராவது ஒருவர், டெண்டுல்கருடன் இணைந்து ஆடியிருந்தால் இந்திய அணி வெற்றி பெற வாய்ப்பு கிடைத்திருக்கும். இந்திய துடுப்பாட்டக்காரர்களின் மோசமான ஆட்டமே தோல்விக்கு முக்கிய காரணம் என்றால் அது மிகையல்ல. இறுதியில் இந்திய அணி 25ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இலங்கை அணி தரப்பில் லெக்ஸ்பின்னரான சந்தானா சிறப்பாக பந்துவீசி டிராவிட், யுவராஜ்சிங் மற்றும் மொகமது கைப் ஆகிய முன்னணி பேட்ஸ்மேன்களை வீழ்த்தியது இலங்கை அணியின் வெற்றிக்கு முக்கியகாரணமாக அமைந்தது. சந்தானா 33 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களை வீழ்த்தினார். தவிர வாஸ், ஜொய்சா, ஜெயசூர்யா மற்றும் தில்ஷான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இறுதிப்போட்டியின் ஆட்டநாயகான அட்டப்பட்டு தேர்வு செய்யப்பட்டார். தொடர் நாயகனாக ஜெயசூர்யா தேர்வு செய்யப்பட்டார்.



# ஒலிம்பிக் - 2004







28 வது ஒலிம்பிக் ஒகஸ்ட் 13ல் கிரிக் தலைநகரான ஏதென் நகரில் ஆரம்பமாகின்றது. 202 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்கின்றார்கள். ஒலிம்பிக் பிறந்த கிரேக்க தேசத்தில் 108 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒலிம்பிக் போட்டி நடைபெறுகின்றது.



# அமெரிக்க வட்டிவீதம் அதிகரிக்கின்றது

192

*The Federal Reserve Board அதிபர் கிறீன்ஸ்பான் August 10, 04 இல் வட்டிவீத்தை 1/4% ஆல் அதிகரித்துள்ளார். இதனால் வட்டிவீதம் 1.5% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வட்டிவீதம் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது. இந்த வருடத்தில் அமெரிக்காவில் இது இரண்டாவது வட்டி அதிகரிப்பாகும். அடுத்த Federal Reserve Board கூட்டம் செப்ரெம்பர் 24, 04 நடைபெற இருக்கிறது. இந்த திகதியில் வட்டிவீதம் மேலும் அதிகரிக்குமா அல்லது இவ்வாறே இருக்குமா? என்பதுவே இன்றைய கேள்வியாக உள்ளது?*

*அமெரிக்க வட்டிவீத அதிகரிப்பு, கனடிய வட்டிவீத அதிகரிப்பு எதிர்வு கூறல் போல் தோன்றுகின்றது. கனடிய மத்தியவங்கியின் அடுத்த கூட்டத்தில் வட்டிவீதம் அதிகரிக்க சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது.*

## ரொறொன்ரோவில் புதிய வீட்டு நிர்மாணத்தில் வீழ்ச்சி




*எதிர்பாராத அளவிற்கு ரொறொன்ரோ பெரும்பாகத்தில் புதிய வீடுகள், கொண்டோக்களின் நிர்மாணத்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பொதுவாக யூன், யூலை மாதங்கள் மந்தகதியில் வீட்டு வியாபாரங்கள் நடப்பது இயல்பு. எதிர்பாராத அளவிற்கு இவ்வருட வீழ்ச்சி காணப்பட்டது. யூன் மாதத்துடன் ஒப்பிடும்போது யூலை மாத்தில் 20.6% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இருந்தும், வீட்டிற்கு பாவிக்கப்படும் பொருட்களின் விலை அதிகரிப்பும், தொழில்புரிபவர்களிற்குரிய சம்பள அதிகரிப்பும் அருகி வரும் நிலத்தின் அளவினால் ஏற்பட்டுள்ள காணியின் விலை அதிரிப்பினாலும் புதிய வீடுகள், கொண்டோக்களின் விலை அதிகரித்தே செல்கின்றது. ஒப்பீட்டு ரீதியில் 2-3 வருடங்களில் விற்கப்படும் வீடுகளின் விலை, புதிதாக விற்கப்படும். வீடுகளின் விலையை விடக் குறைவாகக் காணப்படுகின்றது. இதே நிலை புதிதாக கட்டப்படும் வியாபாரக் கட்டிடங்கள், கொண்டோ கட்டிடங்களிற்கும் பொருந்தும். ரொறொன்ரோ பெரும்பாகத்தில் யூலை மாதத்தில் வீட்டின் விலை 1% ஆல் இறக்கம் ஏற்பட்டுள்ளது. யூன் மாதத்தில் $316,510 ஆக இருந்த சராசரி வீட்டுவிலை $312,418 ஆக குறைந்துள்ளது. பொதுவாக செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்கள் வீட்டு வியாபாரத்தில் உற்சாகமாகக் காணப்படும்.*

## ரொறொன்ரொவின் அலுவலக வாடகை குறைந்து வருகின்றது.

*கனடாவின் வியாபார நகரமான ரொறொன்ரோவில் அலுவலக இடத் திற்குரிய வாடகை மிகக் குறைந்து வருகின்றது. அண்மையில் உலகளா விய ரீதியில் எடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி ரொறொன்ரோ நகரம் 38வது இடத்திற்கு தள்ளப் பட்டுள்ளது. இதனால் ரொறொன்ரோ வில் வியாபாரம் செய்வது மலிவாகக் காணப்படுகின்றது. பொதுவாகக் கூறினால் ரொறொன்ரோவில் ஒரு சதுர அடிக்குரிய அலுவலுக இடத்திற்குரிய வாடகை $35.78 ஆகக்காணப்படுகின்றது. இதனை மேற்குப்பகுதி, இலண்டனுடன் ஒப்பிடும்போது மிகக்குறைவானது. மேற்கு இலண்டனில் ஒரு சதுர அடியின் வாடகை $177.39 ஆகும். இந்தக் கணிப்பீட்டில் ஒட்டாவா 51வது இடத்திலும், கனடாவின் இரண்டாவது பெரிய நகரம் மொன்றியல் 64வது இடத்திலும், கல்கரி 66வது இடத்திலும், வன்கூவர் 67வது இடத்திலும் காணப்படுகின்றது.*





# நாமும்
# நமது
# இல்லமும்
ராஜா மகேந்திரன்




## Interest Rate

| | |
|---|---|
| 5 Yrs Mortgage | 5.40% |
| 3 Yrs Mortgage | 4.70% |
| Prime Rate | 3.75% |
| Bank Rate | 2.00% |




# புதிய வாகனங்களின் பராமரிப்பு



எம்மவர்கள் பலரும் புதிய வாகனங்களை வாங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் இந்தக் கட்டுரையை வரைவது பொருந்தும் என நம்புகிறேன். புதிய வாகனங்களை வாங்கும்போது நாம் மனதில் நினைத்துக் கொள்வது என்னவெனில் $35,000க்கு Car வாங்குகிறேன். இதில் $10,000 Dealer ship க்கு இலாபம், $5,000 இதை விற்றவருக்கு கிடைக்கும் என்பது, அது ஒரு தவறான கணிப்பு என்பது சிலருக்கு தெரியும். நீங்கள் வாகனம் வாங்கிய Dealer உங்களிடம் இருந்து உண்மையில் உழைப்பது என்பது, உங்கள் வாகனத்தை அந்த Dealer இடம் Service க்கோ அல்லது Body work க்கு கொண்டு செல்லும் போதோ தான், இப்போது உங்களுக்கு விளங்கும் ஏன் நீங்கள் Service க்கு ஒழுங்காக Dealer இடம் கொண்டு போகவேண்டிய நிர்ப்பந்திற்கு உங்களை உருவாக்கு கிறார்கள் என்பது. அதற்காக உங்களை Dealer இடம் Service க்கு போக வேண்டாம் என்று சொல்ல வரவில்லை. Dealer இடம் செல்லும் போது அவர்கள் சொல்வதற்கு எல்லாம் தலையாட்டும் பொம்மைகளாக மாறாமல் Maintenance புத்தகத்தை வாசித்து எது தேவை எது தேவையில்லை என்பது நீங்கள் கண்டு கொண்டு அந்த தேவையானதை மட்டும் Dealer இடம் செய்வது மூலம் பணத்தை பெருமளவில் மீதப்படுத்தலாம் என்பதை மனதில் கொள்ளுங்கள். அது தவிர Brake போன்ற பல வேலைகளை வெளியிடங் களிலும் செய்யலாம். எடுத்தவுடன் தமிழ் Garage எல்லாம் சுத்துமாத்து, அவர் களுக்கு வேலை தெரியாது என்று சொல்வது சகஜமாகிவிட்ட ஒரு விடய மாகும். ஒருத்தர் சுத்தினார் என்பதற்காக மொத்த தமிழ் சமூகத்தையும் குறை சொல்வது மாபெரும் தவறு. தவறு செய்தவரை விடுத்து மற்றவரிடம் செல்வதில் எந்தத் தவறும் இல்லை என்று நினைக்கிறேன். இதுதவிர Dealer களுக் கிடையே Service இன் விலைகளில் வித்தியாசம் உள்ளது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். தமது தொழிலில் கவனமாகவும் தமது பெயரை நல்ல நிலையில் வைத்திருக்க நிறையப்பேர் எம்மவரில் இருக்கிறார்கள் என்பதனை மறத்தல் கூடாது. மற்றைய இனத்தவர்கள் எமது இனத்தைப் போற்றும் போது நாம் ஏன் எம்மைத் தூற்றவேண்டும்?

- சோதீஸ். 416-704-1179

# டி. ராஜேந்தர் உருவாக்கும் குட்டி நகரம்

பரபரப்பாக ஒரு குட்டி நகரம் உருவாக்கிக் கொண்டிருந்தது. வீடுகள், கடை வீதிகள், வைத்தியசாலை, பொலீஸ் நிலையம், குறுகலான சந்துகள் என்று வெகு வேகமாக வேலைகள் நடந்து கொண்டிருந்தது.

என்ன ஆச்சரியம் என்று எட்டிப்பார்த்தேன். டி. ராஜேந்தர் தலை தெரிந்தது. உற்சாகமாக தலையாட்டினார்.

'அடடே நம்ம சினிமாக் குருவி வாப்பா' என்று வரவேற்றார். 'சென்னையில் மழை வரும் போல இருக்கே' என்றேன்.

'அதைவிடுப்பா. 'இது என்னோட வெள்ளிவிழா ஆண்டுப் படம் 'வீராச்சாமி'. தமிழ், தெலுங்கு இருமொழிகளிலும் மிகப் பிரமாண்டமாகத் தயாராகின்றது.





அதற்காகத்தான் இந்த குட்டி நகரத்தை முப்பது இலட்சம் செலவழித்து உருவாக்குகின்றேன்' ராஜேந்தர் பெருமை யாகக் கூறிக்கொண்டிருக்க இடை மறித்தேன்.

'கதாநாயகன் யார் சார்? சிம்புவா?' செல்லமாக என் முதுகில் தட்டினார்.

'வித்தியாசமான வேடத்தில், வக்கீல் தாதாவாக நான் தான் நடிக்கின்றேன். நமக்கு ஜோடி மும்தாஸ், இள வட்டங்களுக்காக இளைய புதிய ஜோடியையும் அறிமுகம் செய்கின்றேன்'

அப்படியா விசயம் என்று மெல்ல அந்த இடத்தை விட்டு பறந்தேன்.

- சினிமாக் குருவி

16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 154

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | 3 |
| | | 4 | | | | | |
| | | | | 5 | | 6 | |
| 7 | | 8 | 9 | | | | |
| | | | | | 10 | | |
| | | | | 11 | | | |
| | 12 | | | | | | 13 |
| 14 | | | | | | 15 | 16 |

இட - வல

1. மீன்பாடும் தேன் நாடு எனப்படும் இடம்
5. யானை(வல-இட)
6. தோய்த்தல் செய்
7. தகுதி
10. ஆய்த எழுத்து
11. மங்களம் (வல-இட)
13. தகுதி (வல-இட)
14. தவளை
16. உள்ளே போ (வல-இட)

மேல் - கீழ்

1. கோவிலின் சமையலறை
2. ஓலையில் பின் னும் ஒருகொள்கலன்
3. மகளிர் சேலை
4. ஒழுகு
6. நீக்கு
8. பொருளின் இயல்பு
9. கோடு(கீழ்-மேல்)
11. இன்பம்
12. இசை
15. பாய் (கீழ்-மேல்)
16. பார் (கீழ்-மேல்)

*யூலை மாதம் வந்த குறுக்கெழுத்துப்போட்டியின் இலக்கம் 153. தவறுக்கு வருந்துகிறோம்.*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சூ | த் | தி | ர | தா | ரி | | சொ |
| ரி | | ன் | | ளா | வி | | ற் |
| ய | | ப | ற | ண் | | தி | பொ |
| கா | | ண் | | மை | | கு | ழி |
| ந் | | ட | | | உ | த | வு |
| தி | ரு | ம் | பு | | ரு | | |
| | | | | | வ | ரி | சை |
| அ | ஞ் | ச | ல | க | ம் | | ஓ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் August 28, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**153இல் வெற்றி பெற்றோர்**

1) M. Mathusha , Scarborough
2) A. Senthil, Mississauga


• ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
• அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
• வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



MOHAN
HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# இனிப்பு வருத்தத்தால் பாலியல் உணர்வுகள் பாதிக்கப்படுமா?

## செழியன்

### Diabetes I

Glomeruli குழாய்களுக்குள் குருதியை எடுத்துச் செல்லும் பணியை capillaries என்று அழைக்கப்படுகின்ற மிகமிக நுண்ணிய குருதிக் குழாய்கள் தாம் செய்கின்றோம் என்று வாழ்நாள் முழுதுக்குமான ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டுள்ளன.

தமது வாழ்நாள் முழுவதும் துயரத்தை தருகின்ற உடல் உபாதைகளைச் சந்திக்கின்றார்கள். பலர் சிறு நீரகத்தையும், கண்பார்வையையும் இழந்துள்ளனர். சிலர் கால்களை இழந்துள்ளனர். இன்னும் பலர் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகி யுள்ளனர்.




உடலில் இருந்து வெளியேறும் கழிவுகளையெல்லாம் வாரி அள்ளி எடுத்துக்கொண்டு capillaries குழாய்கள் ஊடாக சீறி வருகின்ற குருதி ஒரு சொட்டும் விடாமல் Glomeruli க்குள் பீறிட்டுப் பாய்கின்றது. இவ்வாறு செல்லும் குருதியில் இருக்கின்ற அனைத்துக் கழிவுப் பொருட்களும் படு சுத்தமாக வடிகட்டப்படுகின்றது. வடிகட்டப்படும் கழிவு

நீரழிவு நோய் என்பது குருதியில் குளுக்கோசின் அளவு அளவுக்கும் அதிகமாக இருப்பதாகும். அவ்வாறு அளவுக்கு அதிகமாக குளுக்கோஸ் குருதியில் இருக்கும் போது அது சிறுநீரகத்தில் உள்ள மிக நுண்ணிய குருதிக் குழாய்களையெல்லாம் ( capillaries) சிதைவடையச் செய்துவிடுகின்றது. சில சமயம் இந்த மயிர்த்துளைக் குழாய்களுக்கூடாக குருதி செல்ல முடியாமல் குழாய்கள் அடைபட்டுப் போய்விடுகின்றன.

**கனடாவில் மட்டும் வருடத்திற்கு 60 ஆயிரம் மக்களைப் புதிது புதிதாகத் தாக்குவதற்கான ஒரு பெரும் தாக்கிதல் திட்டத்துடன் இந்நோய் திரிகின்றது. அத்தோடு கனடாவின. இறப்புக் கான காரணங்களில் ஏழாவது இடத்தை வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. 2001 ஆம் ஆண்டு மூன்று மில்லியன் மக்களை இது தாக்கிவிடும்**

கள் மறுபடியும் உடலுக்குள் செல்லாமல் இருக்க உடனுக்குடன் சிறுநீருடன் வெளியேற்றப்படுகின்றது. அதே சமயம் உடலுக்கு அத்தியாவசியமான புரதம், நீர், மற்றும் உயிர்ச்சத்துக்கள் சிறுநீருடன் வெளியேறாமல் நுட்பமான முறையில் பாதுகாக்கப்படுகின்றன. இத்தகைய அபூர்வமான ஒரு செயல்பாட்டைச் செய்கின்ற நுட்பமான இயந்திரமான இந்த சிறுநீரகத்தை தகர்த்து செயல் இழக்கச் செய்துவிடும் அபாயகரமான ஒரு நோயே நீரழிவு நோய் (diabetes) ஆகும். அது மட்டுமல்ல, இது கண்ணில் உள்ள Retina வில் இருக்கின்ற குருதிக் குழாய்களைத் தாக்கி கண்பார்வையை ஒழித்துக் கட்டிவிடுகின்றது. இரத்தக் குழாய்களை சேதமாக்கி இரத்தோட்டத்திற்கு பெரும் தடையை ஏற்படுத்துகின்றது. இதனால் உடலில் பெரும் அழிவுகளை எல்லாம் உருவாக்கி மரணத்திற்கு வழி வகுக்கின்றது.

இரண்டு மில்லியன் கனேடியர்களை அதிரடியாகத் தாக்கி உள்ள இந்த நோயால் 25ஆயிரம் கனேடியர்கள் 75 வயதை அடையமுன்னரே மரணம் அடைகின்றனர். இது போக இன்னமும் இரண்டரை மில்லியன் கனேடியர்களை இன் நோய் தாக்கலாம் என்ற அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாற்பது விகிதமான சலரோக நோயாளர்கள்

இன்னும் சில சமயம் இவை உடைந்து போய்விடுகின்றன. இவை காரணமாக குருதியில் இருக்கின்ற நஞ்சுப் பதார்த்தங்கள் உடலை விட்டு வெளியேற முடியாமல் குருதியிலேயே தங்கிவிடுகின்றன. குருதியில் தொடர்ந்தும் நஞ்சுப்பதார்த்தங்கள் சேமிக்கப்படுமாயின் அது மேலும் சிறு நீரகத்தையும், மற்றும் உடற் கலங்களையும் பாரதூரமாகப் பாதிக்கின்றது.

அது மட்டுமல்லாது உடலுக்கு அத்தியாவசியமான புரதம் மற்றும் உயிர்ச்சத்துக்கள் எல்லாம் சிறுநீருடன் வெளியேறியும் விடுகின்றன.

இந்த செயல் முறை தொடருமாயின் ஒரு கட்டத்தில் சிறுநீரகம் முற்றாக செயல் இழந்து போய்விடுகின்றது. இந்நிலையில் சிறுநீரகம் தனது கழிவகற்றும் தொழிலை முற்றாகவே நிறுத்திவிடும். இதில் இருக்கின்ற இன்னொரு துயரம் என்னவென்றால் இவ்வாறு சிறு நீரகம் படிப்படியாக செயலிழந்து போகின்றதை நோயாளி உணர்ந்து கொள்ள முடியாது என்பதே. எழுபத்தி ஐந்து வீதமான சிறுநீரகம் பழுதடைந்து போன பின்னரே ஒருவரால் தனது சிறுநீரகம் பழுதடைந்து போய்விட்டது என்பதை உணர முடியும் என்று Donna Lillie (Vice president, Research and Professional Education for the Canadian Diabetes Association) கூறுகின்றார்.

இதற்கும் பிறகும் இந்த மனிதரின் உயிரைக் காக்க வேண்டுமாயின் இவருக்கு செயற்கை முறையில் (dialysis) குருதியில் உள்ள கழிவுகளை அகற்ற வேண்டிய கட்டாய நிலைமை உருவாகின்றது. மனித வாழ்க்கையில் இடம்பெறும் ஒரு மகிழ்ச்சிகரமற்ற நடவடிக்கையாகவே இது இருக்கும்.

வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் இவர் dialysis இயந்திரத்தின் மூலம் தனது குருதியை சுத்திகரிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் சில மணி நேரங்கள் இதற்கு செலவாகும். உரிய காப்புறுதி இல்லாவிட்டால் இந்த dialysis க்கு வருடாந்தம் $50,000 செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

Kidney Foundation of Canada வின் அறிக்கை 1998ம் ஆண்டு 22ஆயிரம் கனேடியர்கள் இந்த Renal diseases ஆல் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கின்றது. அதேநேரம் 2006ம் ஆண்டு 40 ஆயிரம்

என்னப்பா?" என்று நீங்கள் முனகிக் கொண்டிருப்பது தெரிகிறது.

"மன்னிக்க வேண்டும். நீரழிவு நோய் நமது பாலியல் உணர்வுகளைத் தாக்கிப் பாதிக் கின்றது. அதுமட்டுமல்ல பாலியல் உறுப்பு களையும் சீரழிக்கின்றது. ஆண்மை குறைபாடு ஏற்படுகின்றது. இதன் விளைவாக குழந்தை உருவாகின்றதிலும் தடையை ஏற்படுத்தி விடுகின்றது."

நீரழிவு நோய் குருதிக் குழாய்களை பாதிக்கின்றது என்று ஏற்கனவே பார்த்தோம். ஆண் உறுப்புக்கு குருதியை எடுத்துச் செல்கின்ற குருதிக் குழாய்களையும் இந்நோய் தாக்குகின்றது. இதனால் ஆண் உறுப்புக்குச் செல்லும் குருதி தடைபடுகின்றது. இதன் காரணமாக ஆண் உறுப்பில் ஏற்படவேண்டிய விரைப்புத் தன்மை ஏற்படாமலே விடுபட்டுப் போகின்றது. அத்தோடு ஆணுறுப்புக்கு செல்லும் நரம்புகளையும் காலகதியில் இது பாதிக்கிறது. தண்டு வடத்தைச் சுற்றியுள்ள நரம்புகளை இந்நோய் செயல் இழக்கச் செய்வதால் ஆண்மை குறைவு ஏற்படுகின்றது.

அதேசமயம் நீரழிவு நோய் உள்ளவர்கள் எல்லாருக்குமே ஆண்மைக்குறைவு ஏற்பட்டு விடும் என்று பயப்படத் தேவையில்லை. இந்த நோயை சரியான முறையில் கையாண்டு நமது



கனேடியர்கள் இவ்விதமான சிறுநீரகப் பாதிப்புக்குள் உள்ளாக உள்ளார்கள் என்றும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவராக நீங்களும் இருந்து விடக்கூடாது. அதற்கு இந்தத் தொடர் நிச்சயமாக உங்களுக்கு உதவிசெய்யும்.

நீரழிவு நோய் நமது உடலில் பெரும் பாதிப்புகளை எல்லாம் ஏற்படுத்தும் என்றும் தெரிந்திருக்கின்றவர்களும் "இது பாலியல் உணர்வுகளைப் பாதித்து, தாம்பத்திய வாழ்க்கைக்கு குழி பறித்துவிடுமா?" என்ற கேள்வியை பகிரங்கமாகக் கேட்கமுடியாமல் தவிக்கின்றனர். இவர்கள் இந்தக் கேள்வியை மனதுக்குள்ளேயே பூட்டி வைத்துத் திணறு கின்றனர். இவ்வாறான பாலியல் பிரச்சினைகள் பற்றிய கேள்விகளை கேட்கின்ற மனப்பக்குவமும், தைரியமும் நம்மிடையே குறைவாகவே காணப்படுகின்றது.

"நாங்கள் கேட்க முடியாமல் தவித்த கேள்வியை நீயே கேட்டுவிட்டாய். சரி! பதில்

கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்போமாயின் எந்தவித தொந்தரவும் இல்லை.

"அப்பாடா ஆபத்தில்லை" என்று சந்தோசப்பட்டுக் கொள்ளாதீர்கள்.

கனடாவில் மட்டும் வருடத்திற்கு 60ஆயிரம் பேர்களைப் புதிது புதிதாகத் தாக்குவதற்கான ஒரு பெரும் தாக்குதல் திட்டத்துடன் இந்நோய் அலைந்து திரிகின்றது. அத்தோடு கனடாவின் இறப்புக்கான காரணங்களில் ஏழாவது இடத்தை வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. 2010ம் ஆண்டு மூன்று மில்லியன் பேரை இது தாக்கிவிடும் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. இவை எல்லாம் நிச்சயம் உங்களைக் கிலிகொள்ளவைக்கும்

இது தனது தாக்குதல் திட்டத்தை செயல்படுத்த எத்தகைய இடங்களைத் தெரிவு செய்கின்றது? தனது தாக்குதலை எவ்வாறு ஆரம்பிக்கின்றது? இந்தத் திட்டத்திற்கு ஆதரவு கொடுப்போர் எல்லாம் யார்? இது பற்றியெல்லாம் அடுத்த இதழில் பார்ப்போம்.




# Niru BRAND®

'நிரு' தயாரிப்புக்கள்'

கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன

**No.1**

முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்

**தரம்**

**No. 1**

Manufacturers & Distributors of

Niru Brand® Products

NIRU ENTERPRISES INC.

76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada

Tel: 416-750-1976 Fax: 416-750-8779

E-mail: niru@total.net Web: www.niru.com

Distributors in Europe

UK. Marketing Office: NIRU ( Europe) LTD.

Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

## "நீலம் சில்க்"

T.P: 416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

# LARGE INDOOR PUBLIC CAR AUCTION

**EVERY WEDNESDAYS EVENING**
**STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM**

## 100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL
- G.M. • FORD
- CHRYSLER • HONDA
- NISSAN • TOYOTA
- V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES






BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM

FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
**www.cialeasing.com**

**1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.**

# SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL







**Fork Lift licence $75.00**

**Tricl licence $599.00**

## In Classes

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- **A-Z & D-Z up grade • One on One Training**
- **Job Placement Right Away!**
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake $175.00**

**Excellent Quality - Low Cost Training**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan
Tel: 416.525.7958
/416.412.7618

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (10 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

17 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
905-793-9546 / 416-616-5979
250 Summerlea Road, Brampton, ON

# பந்தங்களிலிருந்தி நீங்கி இறைவனை அடைதல்

‘ஹலோ!’
‘

வணக்கம் ஐயா! அன்றைக்கு உலகச் சைவப் பேரவைக் கனடாக் கிளை நடத்திய கூட்டத்துக்கு வந்திருந்தியள். நீங்களும் பேசுவியள் என்று பார்த்தேன். பேசாமல் போய்விட்டியள்.’

‘அன்றைக்குத் தாயத்திலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் வந்திருந்த அறிஞர்களுக்காகவே கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. நான் அடிக்கடி பேசுகிற ஆள்தானே. எப்படிக் கூட்டம்?’

‘நல்ல கூட்டம். எல்லோருமே சிறப்பாகப் பேசினார்கள். சித்தாந்த ரத்தினம் கணேசலிங்கம் சைவ சித்தாந்தம் பற்றிப் பேசினார். இன்றைய சூழ்நிலையில் இந்த

## அறுவை - 24

வேதாந்த சித்தாந்த வேறுபாடு கனடாவுக்குத் தேவைதானா என்று ஒரு கேள்வி கேட்க இருந்தேன். தலைவர் டாக்டர் சண்முகவடிவேல் கேள்வி நேரம் முடிந்து விட்டது என்று சொன்னதாற் கேட்க முடியவில்லை. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் இந்தக் கேள்விபற்றி?.’



‘கேள்வி கேட்டும் பயனில்லை. மறுமொழி சொல்லியும் பிரயோசனம் இல்லை என்ற ஞானம் எனக்கு எப்பொழுதோ உதித்து விட்டது தம்பி. கனடாவில் தமிழ் மொழியைப் படிப்பதால் என்ன பயன்? கனடாவில் தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கத்தான் வேண்டுமா? கனடாவில் இவ்வளவு தமிழ்ப் பத்திரிகைகள் தேவைதானா? மூலைக்கு மூலை எதற்குக் கோயில்கள்? சமஸ்கிருதத்தில் ஏன் பூசை செய்ய வேண்டும்? என்பனபோன்ற பல கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் களைத்தும் எதுவித பலனும் இல்லாத நிலையில் இந்த ஞானம் வந்தது.

ஏதோ நீர் கேட்டபடியால் சொல்கிறேன். வேதாந்த சித்தாந்த விளக்கம் கனடாவில் வாழும் சைவர்களுக்குக் கட்டாயமாகத் தேவை. கனடாவில் மட்டுமன்றி உலகத்திலுள்ள எல்லாச் சைவ மக்களும் தமது சமயத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். கனடியச் சூழ்நிலையில் பிற இனத்தவர்கள் தங்கள் சமயத்தை அறிந்திருக்கும் அளவுக்குச் சைவ மக்கள் தங்கள் சமயத்தை அறிந்திருக்கவில்லை என்பது எனது கருத்து. பின்பற்றுகின்ற நெறிபற்றி அறிந்து வைத்திருப்பது கடமை. எதையும் அறியாமல் பின்பற்றுவது மடமை. என்ன ஏற்றுக்கொள்கிறீரா இல்லையா?’

‘ஏற்றுக் கொள்கிறேன். சித்தாந்தம் என்றால் என்ன ஐயா?’

‘சித்தாந்தம் என்றால் முடிந்த முடிபு என்று பொருள். உண்மையில் வேதாந்தத்தமும் சைவ சித்தாந்தமும் நெருங்கிய தொடர்புடையன. உமாபதி சிவாச்சாரியார் தமது சிவப்பிரகாசம் என்ற நூலில் ‘வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்கு தெரிக்கலுற்றாம்’ என்கிறார். அதாவது வேதாந்தத் தெளிவுதான் சைவ சித்தாந்தம். வேதம் சக அந்தம் வேதாந்தம். அந்தம் - முடிபு. வேதத்தின் அந்தம் உபநிடதங்கள். உபநிடதங்களின் கருத்துத் தெளிவே சிவாகமங்கள் என்கிறார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். சிவாகமங்களின் சாரமே சைவ சித்தாந்தம். இன்னும் விளக்கமாகச் சொன்னால் சிவாகமங்களின் அடிப்படையில் சைவத்தை விளக்க எழுந்த தத்துவமே சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தம் மூன்று பொருள்களை உண்மையென நம்புகிறது. அவை பதி, பசு, பாசம் என்பன. பதி - சிவன். பசு - உயிர். பாசம் - ஆணவம், கன்மம் மாயை ஆகிய மும்மலங்கள். மலங்களிலிருந்து விடுபட்டு உயிர் சிவனுடன் இரண்டறக் கலத்தலே சித்தாந்தம். அதாவது முடிந்த முடிபு. மேலும் விளக்கங்கள் வேண்டுமென்றால் உலகச் சைவப் பேரவை - கனடாக் கிளையின் ஏற்பாட்டில் சைவசித்தாந்தக் கலாநிதி க. கணேசலிங்கம் நடத்தும் வகுப்புகளிற் கலந்துகொண்டு கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.’

**கனடாவில் தமிழ் மொழியைப் படிப்பதால் என்ன பயன்? கனடாவில் தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கத்தான் வேண்டுமா? கனடாவில் இவ்வளவு தமிழ்ப் பத்திரிகைகள் தேவைதானா? மூலைக்கு மூலை எதற்குக் கோயில்கள்?**

‘எங்கே வகுப்புகள் நடத்துகிறார்?’
‘மத்திய ஸ்காபரோ சனசமூக நிலையத்திலும் ஸ்காபரோ மக்கள் மன்ற நிலையத்திலும். திகதிகள் மற்றும் நேரங்கள்பற்றிய விவரங்களுக்கு செயலாளர் திரு. தி. சிவயோகபதியுடன் (416 335 5458) தொடர்பு கொள்ளலாம், சரிதானே?’

‘சரி ஐயா. நல்ல விளக்கம். நன்றி. வணக்கம்.’
‘வணக்கம்.“

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!



கவிஞர் வி. கந்தவனம்


## SRI PARADISE Catering & Take -out



416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

திங்கள் - செவ்வாய்
கொத்துரொட்டி
ஆடு or மாடு or கோழி
$2.99

புதன் - வியாழன்
புட்டு Combo- குழல் பிட்டு, மாசிச்சம்பல், நெத்தலி, உருளைக்கிழங்கு குழம்பு
$2.99

வெள்ளி ரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை
$4.50

வெள்ளி
inner Special
மசாலா தோசை, சாம்பாறு, சம்பல்
$2.99

Dinner Special
சிங்கப்பூர் நூடில்ஸ், தண்டூரி சிக்கன்
$3.99



பரடைசின் Special
புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad
$2.99

Daily speciall
மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு
$2.99

சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு
கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு or மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, மீன் பொரியல், கட்டைச்சம்பல், கட்லட், உருளைக்கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல்
$5.99

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

# சமூக வழக்காறுகள் பற்றி சியாம் பெனகல்

**சியாம் பெனகலின் மற்றைய படைப்புக்கள்**

Kondura / Anugraham
வரம்பெற்ற பிராமணனுக்கு நிலப்பிரபு வின் மருமகளின் மேல் காதல் - காமம் உண்டாகிறது. நிலப்பிரபு பற்றிய உண்மைகளைக் கண்டறிகிறார் இந்தப் பிராமணர். நிலப்பிரபு உறவுகொண்ட பெண்களென காண்கிறார். ஆனால் மனைவியை விட்டு வந்த பிராமணனுக்கு தனது மனைவி ஒரு தெய்வமாகவே தெரிகிறாள்.

## வானரன்

இறுதியில் பிராமணன் தனது மனைவி யைப் பலாத்காரம் செய்கிறார். அவள் தற்கொலை செய்கிறாள். மிகவும் சிறப்பாக பாலியல் உறவுகள், அதன் பன்முகத் தன்மைகளை விமர்சிக்கிறார் சியாம் பெனகல். இந்துத்துவ முறைப்படி திருமணம் செய்யப்பட்ட மனைவியே தன்னை அழித்துக்கொள்ளும் வகையில் எமது சமூக வழக்காறுகள் உள்ளன என விமர்சிக்கிறார். மராத்திய எழுத்தாளர் G. T. Khan Dkar நாவலை மையமாகக் கொண்டது இந்தப் படம். இதில் பிரபல தமிழ், தெலுங்கு நடிகை வாணிஸ்ரீ பிராமணன் மனைவியாக நடித்துள்ளார். பிராமணனாக ஆனந்நாக், நிலப்பிரபுவின் மருமகளாக சுனிதா பட்டீல் நடித்திருந்தனர். காட்சியமைப்புகள் பெனகலின் வழமையான காட்சியமைப்பிவிட சற்று மாறுபட்டவையே. கோவிந் நிகாலினி மிகவும் சிறப்பாக ஒளிப்பதிவு செய்திருந்தார். பெனகலின் மகள் நீரா இப்படத்திற்கு Art Director ஆக கடமையாற்றியிருந்தார்.

**பெண்களின் குரலாக அவரது அடுத்த இருபடங்கள்**
1. பூமிகா (The role)



பிரபல நடிகை Hansa Wadkar இன் சுயசரிதையை மையமாகக் கொண்டது. "Listen I am telling you" என்ற இவரது சுயசரிதை பலத்த வரவேற்பைப் பெற்றது. 11ஆவது வயதில் நடிக்க வந்த இவர் சந்தித்த மிகக் கொடூரமான பல இன்னல்கள், உடலைப் பகிர்ந்தது எனப் பல விடயங்கள் இதில் எழுதப்பட்டிருந்தன. ஒரு தடவை தனது கணவரிடமிருந்து பிரிந்து சென்ற இவர் ஒரு நிலப் பிரபுக்கு மூன்றாவரு மனைவியாக மூன்றாண்டுகள் வாழ்ந்துள்ளார்.

சமூகத்தில் உயர் அந்தஸ்துள்ள பலருடன் இவருக்குத் தொடர்பு இருந்தது. 1972ஆம் ஆண்டு குடி வெறியாலும் உடல்நிலை பாதிக்கப் பட்டு தனது 50ஆவது வயதில் காலமானார். இவரது வாழ்க்கை வரலாறு நடிகை சாவித்திரியை ஞாபகப்படுத்துகிறது.

இவரது இந்த 'தன்னிலை வரலாறு' Auto biography நூலை மையமாகக் கொண்டதே "பூமிகா". இந்தியாவில் முதன்முறையாக ஒரு நடிகையின் "தன்னிலை வரலாறை" மையமாகக் கொண்டு திரைப்படம் வருவது இதுவே முதல் தடவை. தமிழில் ஒரு சில நாவல்களும், படங்களும் வெளிவந்துள்ளன. உதாரணமாக அசோகமித்திரனின் "கரைதேடும் அலைகள் " (நாவல்), சுஜாதாவின் "கரையெல்லாம் செண்பகப்பூ(?),

2. உஷா (சிமிதா பட்டீல்)
ஒரு தேவதாசி குடும்பத்தை சேர்ந்தவர். இவரது வம்சத்தில் இவரது தாயே முதன் முறையாக திருமணம் செய்து கொண்டவர். பக்கத்து வீட்டுக்காரரின் மகன் கேசல் (அமோய் பலேகர்) ஒரு குடும்ப நண்பர். கேசவ் மூலம் மும்பை வந்து முதலில் பாடகியாக பின்னர் நடிகையாக மாறுகின்றார். இவருக்கும் பிரபல நடிகர் ராஜன் (ஆனந்நாக்)க்கும் தொடர்புகள் ஏற்படுகின்றன. ஆனால் ராஜன் திருமணத்துக்கு தயாரில்லை. தாயாரின் வற்புறுத்தலில் கேசவ்வை உஷா திருமணம் செய்கிறாள். இவளது பணமே மூலதனமாக இயங்கும் குடும்பத்தில், உஷாவின் சந்தோசத்துக்கு இடமில்லை. அவளது ஆசைகள் நிராகரிக்கப் படுகின்றன. ராஜனின் வீட்டிற்கு செல்கிறாள். அவன் நிராகரித்து விடுகிறான். உஷாவுக்கும் இயக்குனர் சுனில் வர்மாவுக்கும் (நஷரூதீன் ஷா) தொடர்புகள் ஏற்படுகின்றன. அவளது கருவை அழித்து விடுமாறு கணவன் தொல்லை கொடுக்கிறான். சுனில் வர்மாவும், உஷாவும் தற்கொலை முயற்சியில் இறங்குகின்றனர். அது தோல்வியில் முடிகிறது.

உஷா Hotel இல் தங்கியிருக்கும் பொழுது செல்வந்தர் Kale (அமரிஷ் பூரி) சந்திக்கின்றாள். அவரது வீட்டிற்கு குடிபுகும் உஷா, அவரது முழு பணத்தை குடும்பத்தையும் நிர்வகிக்கின்றாள். அவரது மகனதும் கட்டிலில் சுகவீனமாக இருக்கும் மனைவியினதும் அன்பைப் பெறுகின்றாள். ஆனால் அவள் அந்த வீட்டில் ஒரு சிறைக்கைதியாக இருப்பதை உணர்கின்றாள். தனது கணவனுக்கு ரகசியமாக கடிதம் எழுதி, பொலிஸ் மூலம் தப்பிக் கொள்கின்றாள்.




மீண்டும் Hotel வாசம் உஷாவின் மகள் தனது வீட்டில் தங்குமாறு கேட்கிறாள். கணவன் கேசல் வீட்டிற்கு வருமாறு அழைக்கின்றான். பிரபல நடிகர் ராஜன் தன்னுடன் வருமாறு அழைக்கின்றார். அவள் மறுத்து விடுகிறாள்.

இளம் வயது உஷாவின் தாய்க்கும் கேசவ்வுக்கும் உறவுகள் உள்ளன. இதை உஷா ஒரு நாள் காண்கிறாள். தாய் அடித்து கொடுமைப்படுத்துகிறாள். பின்னர், கேசவ்விற்கும் உஷாவின் மேல் உள்ள ஈடுபாட்டை அறிந்து, தனது உறவை மகளுக்காக விட்டு விடுகிறாள். இவ்வாறான ஒரு சிறுகதை காலச்சுவட்டில் முதல் பரிசு பெற்ற சாணக்கியாவின் கருவாகும்.)
இவ்வாறாக பல சமூக உறவுகளை பெனகல் விமர்சித்துள்ளார். பெண், சமூகம், திரைப் படம், உறவுமுறைகள் என பல தளங்களில் விமர்சித்துள்ள பெனகல், சமூகத்தின் மேல் தனக்குள்ள கோபத்தையும் காட்டத் தவறவில்லை.

Mandi (Market Place, 1983)
Colin Higgins இன் The Best Little Whorehouse in Texas என்ற நாடகத்தின் பதிப்பில் உருவானது இப்படம். மத்திய வர்க்கத்தினரும், பாலியல் தொழிலாளிகளையும் மையமாகக் கொண்டது. அவர்களது வாழ்வியல், இடைத்தரகர்கள், அவர் களது முதலாளி, இவர்களுக்கான உறவு என பல தளங்களில் விமர்சிக்கிறது. சபனா ஆஷ்மி பாலியல் தொழிலாளிகள் விடுதி நடத்துனராகவும், அவரின் அன்புக்கும், பாசத்துக்கும் உரிய பாலியல் தொழிலாளியாக சிமிதா பட்டீலும் நடித்துள்ளார்கள். பாலியல் தொழிலாளிகள் பற்றி இப்படம் அளவுக்கு இதுவரை எந்தபடங்களும் விமர்சிக்கவில்லை.

Junoon (Possessed, 1978)
பிரபல நடிகர், தயாரிப்பாளர் சஷி கபூர் பெனகலுடன் இணைந்து கொண்ட படம். சசி கபூர், பின்னர் 36 சௌரந்கிலேன் போன்ற பிரபல படங்களை தயாரித்துள்ளார்.

Jared கானும், அவனது மனைவியும் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். அதே கிராமத்தில் Ruth உம் அவனது ஆங்கிலோ இந்திய தாயும் வாழ்கின்றனர். ஜாவிட்டின் தம்பி பிரித்தானியருக்கு எதிராக கிளர்ச்சி செய்கின்றான். ஜாவிட்டின் குடும்பத்தில் Ruth இன் குடும்பம் தஞ்சம் புகுகிறது. ஜாவிட் Ruth இன் திருமணம் செய்ய விரும்புகின்றான். இதற்கிடையில் பிரித்தானிய படைகள் வெற்றிகொள்ள ஆரம்பிக்கின்றனர். போருக்கு சென்ற ஜாவிட் திரும்பி வரும் பொழுது Ruthம் அவனது தாயும் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்து, பிரித்தானிய படைகளுக்காக காத்து நிற்கின்றனர். ஜாவிட் Ruth ஐ பார்க்க தாய் மறுத்து விடுகிறாள். தேவாலயத்தின் வெளியே வந்து Ruth தனது காதலன் ஜாவிட்டை கூப்பிடுகின்றாள். ஜாவிட் திரும்பிப் பாராது சென்று விடுகிறான்.

சசிகபூர், சபனாஆஷ்மி, ஜெனிபர் கபூர் போன்றோர் நடித்துள்ள இப்படம் போர், வன்முறைகள், புதிய கலாசார முறைகள் அதன் அபத்தங்கள் என விமர்சிக்கிறது.

பிரித்தானியர்களுடனான போரின் கதை ஒன்றை கூறியுள்ளார். வழமைக்கு மாறுபட்ட பெனகலின் படமிது. ஆனால் பெனகல் ஒரு சமூக விமர்சக இயக்குனர் என்ற அந்தஸ்தை அதிகப்படுத்தியது இப்படம்.

சியாம் பெனகல் இன்றைய உலகின் மிகக் குறிப்பிடத்தக்க இயக்குனர். இவரது ஒவ்வொரு படமும் பல்வேறு தளங்களில் விமர்சிக்கிறது. அரசியல், சமூக விழிப்புணர்ச்சிக்காக தனது படைப்புக்களை விமர்சனமாக்கியுள்ளார். இவரது பாசறையில் வளர்ந்தோர் பலர். குறிப்பாக ஓம் பூசி, சபனா ஆஷ்மி, மறைந்த ஸ்மிதா பட்டீல், அமோர் பலேகர், நஷரூதீன் ஷா, ஆனாந் நாக் என பட்டியல் இடலாம். இவர்களுடன் கோவிந் நிகாலினி இன்றைய உலகின் ஒளிப்பதிவாளர், இயக்குனர் (இவரது படங்கள் சில விளம்பரத்தில் இடம்பெற்றுள்ளன)

இவரது படங்கள் அனைத்தும் Toronto வில் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பாக N.N.Video, Photo Fast, S.K.Video போன்ற கடைகளிலும் ஏனைய இந்திய கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அடுத்த இதழில் குறுந்திரைப்படவிழா பற்றிய பார்வை.

**ரதன் எழுதும் 'அமெரிக்கத்தேர்தல்' அடுத்த இதழில்.**



# கூடியபின் குற்றங் காணும் கொள்கையைத் தள்ளு

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

*அன்பை சம அளவில் கொடுத்து, சமமாகப் பெற்றுக்கொள்ளும் போது அன்பு சமமாகப் பரிமாறப்பட்டு சமமாகப் பகிரப்படுகின்றது. சமமானவர்களிற்கிடையே தான் அன்பு நிலைத்திருக்க முடியும். ஒருவரிடமிருந்து மற்றவர் எதையாவது பெற முயற்சித்தால், மற்றவரிடம் இல்லாதது தன்னிடம் இருப்பதாக ஒருவர் நம்பினால், தனது சுயரூபமில்லாத வேறு ஒன்றாகத் தன்னை மற்றவர் மாற்றி விடுவதாக ஒருவர் நினைத்தால், அந்த உறவு அன்பில் விளைந்ததல்ல. அது அழிவைத் தரும் விபத்திற்கு அழைப்பு.*

*சமமான ஆளுமை இல்லாவர்களுக்கிடையில் தோன்றும் உறவு வெகு விரைவில், 'நான்' 'நீ' என்ற சகதிப் போராட்டத்துடன் குரோதக் காட்சியாக மாறிவிடும். நான் தருகின்றேன்! நீ பெற்றுக்கொள்கின்றாய்! எனக்குத் தேவை! நீ தா! எனக்கு எல்லாம் தெரியும்! நீ ஏற்றுக்கொள்! இப்படிப்பட்ட உறவுகளில் ஒருவரை விட மற்றவர் நிச்சயம் கூடிய சக்தி வாய்ந்தவராக இருப்பார். சம ஆளுமை இல்லாத இருவர்க்கிடையில் அரும்பும் உறவு சீக்கிரம் ஒரு மலிவு விற்பனையில் கொள்வனவு செய்யப் பேசும் பேரம் போலாகிவிடும். என்னிடம் இது இருக் கின்றது. அதற்கு பதிலாக என்ன தரப் போகின்றாய்? நான் அதைச் செய்தேன். அதற்குப் பதிலாக நீ என்ன செய்யப் போகின்றாய்? எனக்கு அது வேண்டும். அதை உன்னிடமிருந்து பெற நான் என்ன செய்ய வேண்டும். எனக்கு அது தேவை! அதை நான் பெற என்ன உதவி உன்னால் செய்ய முடியும் என இப்பட்டியல் அநுமார் வாலாய் நீண்டுகொண்டே போகும். ஒருவரை நீ அவர் உள்ளபடியே ஒரு குற்றங் குறையுங் காணாது ஏற்றுக் கொள்ளும்போது உனக்குச் சமமான ஒருவரிடமிருந்து உறவு உனக்கு வாய்த்திருக்கின்றது என்பதை நீ புரிந்து கொள்வாய். உங்கள் இருவருக்குமிடையில் உள்ள வேற்றுமைகளை உணர்ந்தும் அவற்றைக் கொஞ்சமும் மாற்ற விரும்பாது, ஒருவிதப் பயமுமின்றி அந்த உறவை நீ வளர்த்துக் கொள்வாய். உனக்காக நீ செய்யும் தேர்வுகள் எடுக்கும் தீர்மானங் களைப் போலவே அதேமாதிரி உனது உறவும் தனது தேர்வுகள் தீர்மானங்களைச் செய்து கொள்ள இடம் கொடுப்பாய். உன்னை நீயே திருத்திக்கொள்ள, உனது குறைநிறைகளைக் கூறுமாறு மற்றவர்களிடம் கேட்டு, அவர்களின் குறைகளைக் கூறுமாறு மற்றவர்களிடம் கேட்டு, அவர்களின் கூற்றுக்களை கவனத்திற்கெடுப்பாய். மேலும் முக்கியமாக உனது ஆளுமைக்குச் சமமான ஆளுமை உள்ள ஒருவரை நீ நேசிக்கின்றாய். உன்னால் செய்யக் கூடிய அனைத்தையும் அவராலும் செய்ய முடியும். உன்னிடம் இருப்ப தெல்லாம் அவரும் வைத்திருக்கின்றார் என்பது உனக்கு நன்றாகத் தெரியும். உனக்குச் சமமான ஒருவரை நீ நேசிக்காவிடில், மற்றவரை நீ விரும்பயபடி ஆட்டிப்படைக்க முயற்சிக்கின்றாய் என்பதே அர்த்தம். உனது உறவிடம் இல்லாதவற்றை அவருக்குக் கொடுப்பது உனது கடமை, அவரால் முடியாதவற்றை நீ செய்ய வேண்டும் என்று இதுவரை நீ நம்பியிருக் கலாம். ஆனால் உனது உறவுகளையும் நண்பர்களையும் அவர்களும் உனக்குச் சமமானவர்கள் என இன்று ஏற்றுக்கொள். அவர்களுக்குச் சகல விதங்களிலும் உதவ ஆயத்தமாயிரு. ஆனால் என்ன விதங்களில் அவர்களிற்கு உதவப் போகின்றாய் என்பதில் கவனமாயிரு. இன்று நான் நேசிப்பவர்களும் நானும் சமமான ஆளுமை உள்ளவர்கள் என்பதைக் கண்டுகொள்வதில் என்னை ஈடுபடுத்துகின்றேன். சத்தியம் எனும் உண்மை தான், அன்பின் அர்த்தமும் சக்தியும் மிகு வெளிப்பாடு என்பதை நான் உணர்ந்ததும் அன்பைப் புரிந்து கொள்வேன்.*

**எனக்குத் தேவை! நீ தா! எனக்கு எல்லாம் தெரியும்! நீ ஏற்றுக்கொள்! இப்படிப்பட்ட உறவுகளில் ஒருவரை விட மற்றவர் நிச்சயம் கூடிய சக்தி வாய்ந்தவராக இருப்பார்.**

*நீ ஒருவரை உண்மையாக நேசித்தால், தன்னால் எவ்வளவு சிறப்பாகச் செயற்பட முடியுமோ அவ்வளவிற்குச் செயற்பட உன் அன்புக்குரியவர்க்கு உதவிட அத்தியாவசிய மான தகவல்கள் அனைத்தையும் அவருக்குத் தேடிக்கொடுப்பாய். அவர் தனது தேர்வு களையும் தீர்மானங்களையும் சரிவரச் செய்துகொள்ள உதவியாக அத்தியாவசிமான சகல உண்மை களையும் அவருக்குத் தெரியப் படுத்துவாய். எது நல்லது எது கெட்டது என்பதை அவர் தீர்மானிக்கத் தேவையான சகலதும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று நீ விரும்புவாய். இதற்கும் மேலாக, ஒருவரை நீ உண்மையாக நேசிக்கும்*



*போது, அவர்மேல் உனக்கிருக்கும் மதிப்பையும் மரியாதையை யும் காட்ட, சகல உண்மைகளையும் அவருக்குத் தெரிவிக்க விரும்புவாய். அந்த உண்மை எவ்வளவு கசப்பானதாய் இருந்தபோதிலும், அதைச் சமாளித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய சக்தியும் திறமையும் அவருக்கு உண்டு என்ற மரியாதை கலந்த அன்பு உனக்கு அவர்மேல் கட்டாயம் இருக்கும். அவரின் மனதைக் கலக்கிப் புண்படுத்திவிடுமோ என எண்ணி, உண்மைகளை அவருக்குச் சொல்லாது மறைத்து வைப்பது அவரை நேசிப்பதாகாது.*

*அவரைத் துக்கப்படுத்த நீ விரும்பாது விடினும் நிஜங்களை அவரிடமிருந்து மறைப் பது சரியல்ல. அது அவரை நேசிப்பதாகாது. நீ செய்த தப்பு, அவரைத் துன்புறுத்தும் என்பது நன்கு தெரிந்தும் அதை மறைத்து அவருக்குப் பொய் சொல்வது, நீ அவரை நேசிப்பதாகாது. நீ ஒருவரை நேசிக்கும்போது அவரை மட்டுமல்ல அவருடன் உன்னையுங் கூட மதித்து மரியாதையுடன் தான் நீ நடந்து கொள்வாய். நீ உன்னை நேசிக்கும்போது, உன்னை நீயே மதித்து மரியாதை செலுத்துவாய். உன்னையே நீ மதிக்கும் போது, மற்றவர்களையும் மதித்து, எந்தக் கசப்பான உண்மைகளையும் தேவை வரும்போது எடுத்துரைப்பாய்.*

*மேலதிக தகவல்களிற்கு*
*அழையுங்கள் 905-624-9617*



லலிதா புரூடி

DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution
Lendingtree.ca



MANIKKANDAN
Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.

Wedding or any Occasions
Special Deals Available

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு





**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள் மணிகண்டன்.

Call: Siva: 416-283-1260

790 Military Trail , Unit 1A, Scarborough ON M1E 4P7

# தெரிந்தும் தெரியாததும், புரிந்தும் புரியாததும், அறிந்தும் அறியாததும்



நமது நாட்டில் இருந்த காலத்தில் வீதியில் நடந்தோ அல்லது சைக்கிளிலோ செல்லும்போது டேய், டேய், அதைத் தொடாதை பொறு, பொறு நீ சின்னப் பெடியன் உனக்கு உது ஒன்றும் தெரியாது. பிள்ளை அடுப்பிலை கறியிருக்கு உந்தக் கருவேப்பிலையை போடு நான் வாறன். உப்படிக் குரல் தான் கேட்கும். ஆனால் நாம் தினம் தினம் வளருவது போல பிள்ளைகளும் எவ்வளவு வளர்கிறார்கள். ஆனால் புதிய தொழில் நுட்பத்துறையில் எவ்வளவு முன்னேற்றம்.





உலகருக்கு இப்பவும் 8,9,10,11ஆம் வாய்பாடு தடக்கினாலும் சரியான பதில் வரும். ஆங்கிலமும் கொஞ்சம் தெரிந்தாலும் ஸ்பெலிங் தெளிவாகச் சொல்லுவார். ஆனால் இன்று கலகுலேற்றரும் கொம்பியூட்டர் ஸ்பெலிங் பிழையை திருத்தும் எனவே பிள்ளைகள் மூளையை குழப்ப தேவையில்லை. 1985,90,95 களில் வந்தவர்களின் பிள்ளைகள் இன்று 15,16,18 வயதுடையவர்கள்.





சர்வகலாசாலை சென்றவர்கள் செல்லப்போகிறவர்கள் எத்தனைபேர். ஒன்று கூடல்கள் கலாசாரவிழாக்கள் என்று பலர் விரும்பியது போல இளைஞர் மாணவர் காலடி எடுத்து வைத்துவிட்டனர். தமது பாணியில் நிகழ்ச்சிகளை நேரக்கட்டுப்பாட்டுடன் நடாத்துகின்றனர். அப்பாடா! தமிழ் இனிச்சாகாது சாகடிக்கவும் முடியாது. உலகண்ணை உந்தப்பிள்ளைகளுக்கு இலக்கண இலக்கியம் தெரியாது என்றார் ஆட்டிலறி அன்னம்மா. உலகருக்கு ஈராக் செய்தியை கேட்டு அடிக்கடி குழப்பும் ஜோச் புஷ் போல இருந்தது. ரூபி செல்லத் தமிழ், கொச்சைத்தமிழ் கதைப்பதை வைத்து தான் ஆட்டிலறி அன்னம்மா கதைகிறார் என தெரியும்.



தமிழ் தெரிந்தும் பிள்ளைகளுடன் ஆங்கிலம் கதைக்கும் பெற்றோர், உறவினர்களை ஒப்பிடுகையில் தமிழ் பேசுகிறார்கள் என சந்தோசப்படாமல் இலக்கணம் தெரியாது இலக்கியம் தெரியாதென்று சொல்லிக்காட்டினால் உள்ளதும் இல்லாமல் போய்விடும்.

தன்னிடம் கோரோசனை இருப்பது அந்த மிருகத்திற்குத் தெரியாதாம் அதுபோல தமது பிள்ளைகளின் திறமை பெற்றோருக்கு தெரிவதில்லை. தாம் நினைத்த மாதிரித்தான் பிள்ளைகள் வளரவேண்டும் என அடம் பிடிக்கின்றனர்.



மகாத்மாகாந்தி அகிம்சாவாதியாக வருவார் என பெற்றோர் நினைத்திருக்கமாட்டார்கள்.
ஹிட்லர் சர்வாதிகாரியாக வருவர் என பெற்றோர் விரும்பியிருக்கமாட்டார்கள்.
இசையைப் புயல்வேகத்தில் இசைப்பார் என ரகுமான் பெற்றோர் நினைத்தார்களா?
உடல் ஊனமுற்றும் மனம் ஊனமுறாமல் திண்ணைப்பள்ளியில் பாடம் புகட்டிய புலோலி மூதறிஞர் கந்த முருகேசனார் புகழ் பெறுவாரென யாராவது நினைத்தார்களா. ஒவ்வொருவரும் தங்கள் முயற்சியில் திறமை காட்ட சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும். இளைஞர்கள் மாணவர்கள் பலவற்றில் திறமை செய்வார்கள், சாதனை படைப்பார்கள் என அதற்கேற்ற திட்டங்கள் மனந்திறந்து பேசி செயல்பட வைப்பது பெரியவர்களது கடனாகும்.



மிலிக்கன் பார்க்கில ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு ஊர் ஒன்றுகூடல் விளையாட்டு திடலில் தமிழ் விளையாடுகிறது தமிழ்மணம் கமழ்கிறது. அமெரிக்க கோழியின் கொழுப்பு உருகும் மணம், மூக்கைத் துளைக்கிறது.
செக்கண்புளோர் செல்லம்மா களைத்து விழுந்து போய்வந்தா. எத்தனை சின்னஞ்சிறிசுகள், இனிமேல் கோயில் குளத்திலையும் உந்த சின்னஞ்சிறுசுகள் முன்னுக்கு நின்று நடத்தினா தேவையில்லாமல் பிரச்சினை தாற தாய், தகப்பன் திருந்துவினம் என்றபடி நிழலில் அமர்ந்தா செல்லம்மா.



இத்தனை அமளிக்குள்ளும் அன்னம்மாக்கா ஆடியமாவாசைக்கு காகத்துக்கு சோறுவைக்காமல் சாப்பிட்டது விரதம் பிடிச்சமாதிரி இல்லை எண்டா செக்கண் புளோர் செல்லம்மா... உலகரின் கழுகுக் கண்கள் இவற்றைப் பார்க்கத் தவறவில்லை.



## ஒரு பொய்யாவது சொல் கண்ணே



ஒருவர்: கிளிங்ரன் தனது வாழ்வல் நடந்த சம்பவங்கள், சிக்கல்களை மறக்காமல் தனது புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தை எழுதியதில் கன லாபம்கிடைச்சதாம்.

மற்றவர்: நானும் உப்பிடி உண்மையை எல்லாம் புத்தகமாக எழுதினால் என்ன கிடைக்கும்

பக்கத்திலிருந்த அவரது மனைவி: விவாகரத்துக் கிடைக்கும்.

- கலகலப்பு தீசன்




113
நகைச்சுவைத் தொடர்
ராசம்மா ராச்சியம்
கலகலப்பு தீசன்


## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் **நந்தா**





**Nantha Aiyadurai**, B.Eng.

Sales Rep.

Office : 613.823.7555
Cell : 613.866.9931
Toll Free : 1 800 472.6512

COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty

## MORTGAGES



*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*



*LOW - LOW RATES AVAILABLE.*
*TO GET BEST RATE IN TOWN*
*PL. CALL: ANIL JOSHI*

For more information call:

Anil Joshi at

416.888.1072



# பதட்டத்தை (Tension) நீக்க ஆசனங்கள்

## கோமுக ஆசனம்



செயல் முறை - விரிப்பில் கால்களை முன்நோக்கி நீட்டி அமர்ந்து வலதுகாலை மடக்கி இடது பக்கமாக முழங்காலை மடித்து உடலோடு ஒட்டி வைத்து இதுபோலவே இடது காலையும் மடித்து வலதுபக்கமாக வலது முழங்கால் மேல் இடது முழங்கால் படியுமாறு வைக்க வேண்டும். இரு முழங்கால்களும் சேர்ந்திருக்க வேண்டும். இந்த நிலையில் உட்கார்ந்து தியானம் செய்யலாம். இது தியான ஆசனங்களில் ஒன்று.

பயன்கள் - இந்த ஆசனம் செய்வதால் மூலநோய், வாயுத்தொல்லை, ஆண்மைக் குறைவு, மாதவிடாய் கோளாறுகள் நீங்கும். கர்ப்பப்பை இயக்கம் நன்றாக இருக்கும். மகப்பேறுக்குப் பின்வயிற்றுப் பெருக்கம் குறையும். இரத்த உயர் அழுத்தம் சீராகும். மனதுக்கு சாந்தமும், அமைதியும் கிடைக்கும். உயர் இரத்த அழுத்தம் (BP) மனநிலைக் கோளாறு, கோபதாபம் உள்ளவர்கள், அமைதியை விரும்புபவர்கள் இந்த ஆசனத்தை செய்து நலம் பெறலாம்.

**உயர் இரத்த அழுத்தம் (BP) மனநிலைக் கோளாறு, கோபதாபம் உள்ளவர்கள், அமைதியை விரும்புபவர்கள் இந்த ஆசனத்தை செய்து நலம் பெறலாம்.**

## சாந்தியாசனம்

செயல்முறை - விரிப்பில் கிழக்குநோக்கித் தலைவைத்து முகம் மேலிருக்குமாறு மல்லாந்து படுக்கவும். கால்களை இளக்கமாக வைத்திருக்கவும். ஆடையை இறுக்கமில்லாமல் அணியவும். படுக்கை விரிப்பு மற்றும் ஆடை எதுவுமே உடலை உறுத்தாத அளவிற்குப் படுக்கையை சுகமாக அமைத்துக்கொள்ளவும். இந்த நிலையில் கண்களை மூடிக் கால் கட்டை விரலிலிருந்து ஒவ்வொரு பகுதியாக அந்தந்தப் பகுதியை மனக்கண்ணால் நினைத்துச் சாந்தி பெறுவதாக என்று சொல்லி கட்டை விரலுக்குபின் வலது காலின் இரண்டாவது விரல் சாந்தி பெறுவதாக பின் நடுவிரல் சாந்தி பெறுவதாக, நான்காவது மோதிர விரல் சாந்திபெறுவதாக ஐந்தாவது சுண்டு விரல் சாந்தி பெறுவதாக என்று படிப்படியாக ஒவ்வொரு உறுப்புக்கும் வலப்பக்கம் மற்றும் இடப்பக்கம் என்று தனித்தனியாக சொல்லி உச்சந்தலைவரை வந்து இதற்கு அடுத்தாற் போலுள்ள நிலைக்குச் செல்லவேண்டும். இயல்பான சுவாசத்தில் கண்களைத் திறக்காமல் மூச்சானது அடிவயிற்றிலிருந்து மூக்கு வரையில் ஒரே சமமான ரிதத்தில்



வெளிவர வேண்டும். இந்நிலையில் உங்களுடைய உயிரானது விளக்கின் சுடர் அளவில் உள்ள ஜோதியைப் போல் மெல்ல மேல்நோக்கி ஆகாயம் வரை சென்று சந்திரமண்டலத்தில் இறங்குவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இதுபோல் இன்னொருமுறை அதிக எடையுள்ள குண்டான நபராக இருந்தால் தரையில் படுத்தபடியே உடம்பானது அதலபாதாளத்திற்கு செல்வதாகவும் மேலே இருந்து கீழே செல்லும் போது பெரும் பாறாங்கற்கள் சிற்சில பந்துகளைப்போல் உள்ள கற்கள் வழியே உடம்பு அழுத்தத்தோடு கீழேஇ றங்குவதாகவும் கற்பனை செய்து கடைசியில் அதல பாதாளத்திற்கு உடலோடு மெலிந்து கீழே போய் நீரில் மிதப்பது போலவும் கற்பனையை மிதக்க விடுங்கள். இந்நிலையில் முக்கிய உடல் நரம்புகளோடு மனக்கவலை மற்றும் வேதனைகளும் வெளியேறி மன அமைதியும் சாந்தமும் பெறுகிறது. பின்னால் உங்களுடைய நீண்ட பயிற்சிக்கு அடிப்படை காரணமாகிறது. அமைதியும், சாந்தமும் மரணபயம் நீங்கவும் இது காரணமாக அமைகிறது.

பயன்கள் - இன்றைய காலகட்டத்தில் எதிலும் அவசரமோ அவசரம்! அளவு கடந்த பரபரப்பு! இந்நிலையில் அநேகருக்கு ஏற்படும் நோய் இரத்த அழுத்தம் (குறைவு அல்லது கூடுதல்) ஏற்படுகிறது.

உடலிலும் அமிலத்தன்மை கூடி கோபமும், படபடப்பும் அதிகமாகிறது. இதற்கெல்லாம் ஒரே மாற்றுவழி சில நிமிடங்களாவது யோகாசனங்கலை செய்து படபடப்பு நீங்கி சில பிராணாயாமப் பயிற்சி செய்து பதட்டத்தை (Tension) நீக்கிக் கொள்ள

**இன்றைய காலகட்டத்தில் எதிலும் அவசரமோ அவசரம்! அளவு கடந்த பரபரப்பு! இந்நிலையில் அநேகருக்கு ஏற்படும் நோய் இரத்த அழுத்தம் (குறைவு அல்லது கூடுதல்) ஏற்படுகிறது.**

வேண்டும் என்று மனோதத்துவ நிபுணர்கள் இந்தச் சாந்தியாசனத்தை செய்யச் சொல்லி அறிவுறுத்துகிறார்கள். ஆகவே, உடலும், மனமும் ஆரோக்கியம் பெறுவதோடு உங்களின் நீண்ட பயிற்சியினால் ஆன்மா புனிதமடையக் காரணமாகிறது.


NTE AUTO

New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை

ஈழத்தமிழ் மகன்

சோதீஸ்

இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



இம்மாத Special

*2.2% Financing*

*Honda Certified Used Vehicles*

416-704-1179

அலுவலக நேரம்

Mon., Fri., Sat.: 9:00 am - 6:00 pm

Tues., Wed.: 12 noon - 9:00 pm

4334 Kingston Rd, Scarborough





# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**Answers to Tutorial 150** — **August 01, 04**

**Ans. 1.** Hour hand travel 360° in 12 hrs. ∴ 1° is 120 seconds. Minute hand travels 360° in 60 mt. 1° in 10 secs. Let them meet after t secs.
$t/10 = 120 + t/120$ $t = 21.8$ They meet at 4.21.

**Ans. 2.** Difference between sam (60%) and john (40%) is 20%.
∴ 20 % represent ------> 24 votes.
∴ Total number of votes is 5 x 24 = 120.

**Ans. 3.** Since the sum of the ten numbers is 310, each pair of numbers must have a sum 310/5 = 62. ∴ 47 is paired with 15.

